Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 022 | வெள்ளிக்கிழமை | மார்கழி 3ஆம் நாள் 18 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20
விலை : ரூ.30

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## நேற்றும் யாழில்–
# ஐவருக்கு தொற்று!

### மருதனார்மடம் கொத்தணியில் 73 பேருக்கு இதுவரை தொற்று

யாழ்ப்பாணம், டிசெம்பர்18

மருதனார்மடம் சந்தை கொரொனா கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 73 ஆக உயர்ந்துள்ளது. நேற்றுப் புதிதாக 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 19



## அடுத்த 2 வாரங்கள் அவதானம் மிக்கன!

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.18

யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அடுத்த இரண்டு வாரங்கள் தீர்மானம் மிக்கவை. நிலைமையை தீவிரமாகக் கண்காணித்து வருகின்றோம் என்று தெரிவித்தார் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற் 19

## 650 பேருக்கு புதிதாக தொற்று

கொழும்பு, டிசெ.18

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

நேற்றும் 650 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை 19

## கூட்டமைப்பு இணக்கத்துடன் புதிய ஆட்சி!

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணக்கப்பாடு ஏற்படுத்தி ஆட்சியமைக்கும் முயற்சிகளில் வி. மணிவண்ணன் தரப்பினர் இறங்கியுள்ளனர் என்று அறிய முடிகின்றது.

நேற்று பருத்தித்துறையில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த வி.மணிவண்ணன், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் வெளிப்படையாகப் பேசி நல்ல ஒரு ஆட்சி அமைவதற்கான 19

## வடக்குச் சந்தைகள் அனைத்தும் பூட்டு!

யாழ்ப்பாணம், டிசெ.18

வடக்கு மாகாணத்தில் உள்ள பொதுச் சந்தைகள் அனைத்தையும் உடனடியாக மூடும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். 19

## ஹெரோய்ன் கடத்தலின் சூத்திரதாரி மாட்டினார்!

### பொறி வைத்து பிடித்தது பொலிஸ்



யாழ்ப்பாணம், டிசெ. 18

ஹெரோய்னைக் கொழும்பிலிருந்து எடுத்து வந்து யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கும் ஒருவர் காங்கேசன்துறை 19

## இணுவிலில் மாணவனுக்கு தொற்று

### விடுமுறை வரையில் பாடசாலைக்கு சமூகம்

யாழ்ப்பாணம், டிசெ.18

இணுவிலில் நேற்று தொற்றுடன் இனங்காணப்பட்டவர் 19 வயது உயர்தர வகுப்பு மாணவராவார். இவர் பாடசாலை இயங்கும்வரையில் பாடசாலைக்குச் சென்றுவந்துள்ளார். 19

## இரண்டாக பிரிகிறது கிளி. கல்வி வலயம்!

கிளிநொச்சி, டிசெ.18

கிளிநொச்சி கல்வி வலயத்தை இரு வலயங்களாகப் பிரிப்பது தொடர்பில் நேற்று நடந்த கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணக்கமான முடிவு எட்டப்பட்டுள்ளது.

கிளி 19

## ஹெரோய்ன் விற்றார் என பொலிஸால் ஒருவர் கைது!

### விற்கவில்லை என்று அவர் அழுது கெஞ்சியதால் பரபரப்பு

வவுனியா, டிசெ.18

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் ஹெரோய்ன் விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 19

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனவீர்ப்புக்கு தடை

வவுனியா,டிசெ.18

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வவுனியாவில் நடத்தப்படவிருந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்று தடை விதித்துள்ளது. ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் 16

## ஜெனிவா விடயத்தில் தமிழ்க் கட்சிகள் ஓரணி

கொழும்பு, டிசெ.18

இலங்கையில் இறுதிப்போரில் இடம்பெற்ற மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பான பொறு 19

DFCC தங்கவரம்
தங்கநகை அடகுச் சேவை

அவசரத் தேவைகள் தங்கத்தைவிடப் பெறுமதியானவை

அவசரமாகப் பணம் தேவைப்படும்போது உங்களிடமிருக்கும் தங்கநகைகளை எடுத்துக்கொண்டு அருகிலுள்ள DFCC வங்கிக்கு வாருங்கள்.

கடன் தொகையை மேலும் கூட்டியுள்ளோம்!

24 கரட் பவுணுக்கு ரூ. 65,000/-

0.84% மிகக் குறைந்த மாதாந்த வட்டி

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் 33 பேர் மீது கொலைக்குற்றம்

**கொழும்பு, டிசெ.18**
**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள 267 பேரில் 33 பேருக்கு எதிராகக் கொலைக் குற்றச்சாட்டின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. இவ்வாறு மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**



கண்டி தலதா மாளிகைக்கு நேற்று முன்தினம் மாலை வழிபாட்டுக்குச் சென்ற அமைச்சர், அங்கு மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.
அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;
உயிர்த்த ஞாயிறு தினத்தில் 8 இடங்களில் நடந்த குண்டுவெடிப்பு தொடர்பாக 8 விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.
இந்தச் சம்பவங்கள் தொடர்பாக 267 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 33 பேருக்கு எதிராகக் கொலைக் குற்றசாட்டின் கீழ் வழக்குத் தொடரப்படவுள்ளது.
கைதுசெய்யப்பட்டவர்களில் சிலர் சிறைகளிலும், சிலர் தடுப்புக் காவலிலும் உள்ளனர்.
வழக்குத் தாக்கல் தாமதமாவது தொடர்பாக சட்டமா அதிபருடன் கலந்துரையாடினேன். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடைபெற்று வருகின்றது. அதன் அறிக்கை வரும்வரை வழக்குத் தாக்கல் செய்ய முடியாது.
ஜனாதிபதி ஆணைக்குழுவில் வெளிப்படும் புதிய சாட்சிகளின் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்யமுடியுமாக இருந்தால் அதனால் ஏற்படும் முரண்பாடுகளைத் தவிர்க்கும் வகையிலேயே தாமதம் ஏற்பட்டுள்ளது. அனைத்து விடயங்களையும் ஆராய்ந்த பின்னரே வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.
இது தொடர்பாக ஆராய்வதற்காக 12 சட்டத்தரணிகள் சட்டமா அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளனர். விசாரணை நடவடிக்கைகள் முறையாக நடந்திருக்கின்றனவா என்பதை ஆராய வேறு ஒரு குழு என்னால் நியமிக்கப்பட்டுள்ளது.- என்றார்.
(எ-இ)

## வாசுதேவவுக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, டிசெ.18
அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்கு எதிராக எஹெலியகொட தராபிட்டியவில் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.
நீர் வழங்கல் திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைப்பதற்காக அந்தப் பகுதிக்கு அமைச்சர் சென்றுள்ளார். அப்போது அந்தப் பிரதேச மக்கள் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.
இந்த நீர் வழங்கல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் பல சிக்கல்களைத் தாங்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று தெரிவித்தே மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். அந்தப் பகுதியில் உள்ள நீரை வேறிடங்களுக்கு வழங்குவதால் எதிர்காலத்தில் அந்தப் பகுதி மக்கள் நீரின்றி துன்பங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.
அந்த நிகழ்வை நடத்துவதற்கு மக்கள் இடமளிக்காததால், அமைச்சர் அந்த இடத்தில் இருந்து வெளியேறினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## உயர்தர மாணவர்களின் மனு 21அன்று பரிசீலனை

கொழும்பு, டிசெ.18
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட இசற் புள்ளிக்கமைய பொறியியல் மற்றும் பௌதீக விஞ்ஞான பீடங்களுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதை இடைநிறுத்த வேண்டும் என்று இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான மேலதிக பரிசீலனை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
2019 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்றிய 42 மாணவர்களால் உயர் நீதிமன்றத்தில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
உயர் நீதிமன்ற நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, எஸ். துரைராஜா மற்றும் யசந்த கோத்தாகொட ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான இசற் புள்ளியில் பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களுக்கான புள்ளிப்பட்டியலில் பெரும் வித்தியாசம் காணப்படுகின்றது.
அதனால் தங்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்று அந்த மனுவினூடாக நீதிமன்றத்துக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அதனால் புதிய மற்றும் பழைய பாடத்திட்டத் திட்டத்துக்கு அமைய உரிய இசட் புள்ளிகளை வெளியிட வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (எ-இ)

## நஷிர் தோட்டம் முடக்கம்

கொழும்பு, டிசெ.18
கொழும்பு, வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நஷிர் தோட்டம் பகுதி உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளது.
கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கொரோனா ஒழிப்புச் செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (எ-இ)



## கொவிட்-19 ஒழிப்பு திறனை அதிகரிப்பதற்கு நிதி உதவி

கொழும்பு, டிசெ.18
கொவிட்-19 பாதிப்பைக் குறைப்பதற்கான அவசர செயற்பாடுகளின் திறனை அதிகரிப்பதற்காக உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கை அலுவலகமும், ஐரோப்பிய ஒன்றியமும் 2 மில்லியன் யூரோ நிதியுதவியை வழங்கவுள்ளன.
கொவிட்-19 தொற்றாளர்களின் பராமரிக்கை, மேம்படுத்தல் மற்றும் தொற்று நோயைத் தடுத்தல் உள்ளிட்ட பல துறைகள் இந்த உதவி மூலம் மேம்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## மஹ்ரூப்க்கு மறியல்

கொழும்பு, டிசெ.18
முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் உள்ளிட்ட இருவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.
லங்கா சதொசவுக்குச் சொந்தமான வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
(எ-இ)

# உண்மையை மறைத்தால் 5 ஆண்டுகளுக்குச் சிறை!

### *பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எச்சரிக்கை*

கொழும்பு, டிசெ.18
அரச அதிகாரிகளிடம் போலித் தகவல்களை வழங்குவோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களை 5 ஆண்டுகள் சிறைவைக்கவும் முடியும்.
இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கொழும்பில் 9 பொலிஸ் பிரிவுகளும், நாடளாவிய ரீதியில் சில கிராம அலுவலர் பிரிவுகளும் முடக்கப்பட்டுள்ளன.
அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை எந்தளவுக்குக் கடைப்பிடிக்கின்றனரோ, அதற்கமையவே அந்தப் பகுதிகளை தனிமைப் படுத்தலில் இருந்து விடுவிப்பது தொடர்பாகத் தீர்மானிக்க முடியும்.
மருத்துவமனைகளில் பி.சி.ஆர். அல்லது அன்டிஜென் பரிசோதனைக்குச் செல்லும்போது அதிகாரிகள் உங்கள் விவரங்களைக் கோரினால், உண்மையான விவரங்களைத் தெரிவியுங்கள். சிலர் போலியான தகவல்களை வழங்கியுள்ளமை பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரியவந்துள்ளது. அரச அதிகாரி ஒருவருக்குப் போலியான பெயரை, விலாசத்தை வழங்குவது குற்றச் செயலாகும். என்றார்.



(எ-இ)

# மாகாண சபைத் தேர்தல் குறித்து அடுத்த வாரம் இறுதித் தீர்மானம்

## இராஜாங்க அமைச்சர் விதுர அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 18

மாகாண சபைத் தேர்தல் குறித்து அடுத்த வாரம் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். மாகாண சபைகளில் உள்ள குறைகள் நீக்கப்பட்டு அந்த முறைமை பலப்படுத்தப்படும் என்று தெரிவித்தார் கிராமிய கலை கலாசார அபிவிருத்தி இரா ஜாங்க அமைச்சர் விதுர விக்ரம நாயக்க. மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்தியிருந்தால், தற்போது தேர்தல் தொடர்பில் முரண்பட்ட கருத்துக்கள் தோற்றம் பெற்றிருக்காது. மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எதிர்வரும் வாரம் உறுதியான தீர்மானம் அறிவிக்கப்படும். மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழாவது விரைவில் நடத்த அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அரசியல் காரணங்களுக்காகவே கடந்த ஆட்சியில் மாகாண சபைத் தேர்தல் பிற்போடப் பட்டது. அது விரைவில் நடத்தப்படும். பெர முன அமோக வெற்றிபெறும்- என்றார். (ம-இ)

# பொறுப்பின்றி செயற்பட்டால் நாடு மீண்டும் முடக்கப்படும்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 18

மக்கள் பொறுப்பின்றி செயற்பட்டால், மீண்டும் நாடு முழுவதையும் முடக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.



எதிர்வரும் நாட்களில் இந்த நிலை நீடித்தால் கடுமையான நடமாட்டக் கட்டுப்பாடுகள் விதிக்க நேரும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செய்தி தொடர்பாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

ஒரு பிரதேசம் தனிமைப்படுத்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டால், உடனடியாக அங்குள்ள மக்கள் வேறு இடங்களுக்குச் செல்ல முயற்சிக்கின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, இதனை தடுப்பதற்கு பாதுகாப்பு தரப்பினர் திறமைபெற்ற வர்க ளாக இருக்க வேண்டும் என்பதுடன், சுகாதாரத் துறையினரும் வினைத்திறனாக செயற்பட வேண்டும் என தெரிவித்துள்ளார். மேலும் மக்களிடம் இருந்து இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளை எதிர்பார்க்கவில்லை என தெரிவித்துள்ள அவர், இந்த நிலைமை தொடர்ந்தால் மீண்டும் நாடு முழுவதையும் முடக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம் என்றும் எச்சரித்துள்ளார். (ம-இ)



# 50 பேருடன் நத்தார் பண்டிகை

## கர்தினால் மல்கம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 18

தனிமைப்படுத்தப்படாத பகுதிகளில் அமைந்துள்ள தேவாலயங்களில் அதிகபட்சமாக 50 பேருடன் நத்தார் திருப்பலியை ஒப்புக்கொடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக நாடெங்கிலும் உள்ள வழிபாட்டுத் தலங்களில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள் என.

கிறிஸ்தவர்கள் மற்றும் கத்தோலிக்கர்களால் பெரியளவில் கொண்டாடப்படும் நத்தார் பண்டிகை எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் குறித்த பண்டிகையை 50 பேருடன் ஆலயங்களில் கொண்டாட முடியும் என்று நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அறிவித்துள்ளார் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை. (ம)

# கொழும்பில் மட்டும் 15,000 தொற்றாளர்!

கொழும்:பு, டிசெ. 18





கொரோனா வைரஸின் மூன்றாவது அலையின்போது மாத்திரம் கொழும்பு மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தைக் கடந்துள்ளது என கொரோனாத் தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நேற்று முன்தினம் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட 616 பேரில் 266 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என அந்த மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதியிலிருந்து தற்போதுவரை கொழும்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தைக் கடந்துள்ளது. (ம)

### கொரோனாத் தொற்றுக்குள்ளான பெண்ணுக்கு

# ஒரே பிரசவத்தில் நான்கு சிசுக்கள்!

கொழும்பு, டிசெ. 18



கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பெண்ணொருவர் கொழும்பு டி சொய்சா வைத்தியசாலையில் நான்கு குழந்தைகளை பிரசவித்துள்ளார். இரு ஆண் குழந்தைகள், இரு பெண் குழந்தைகளை அவர் பிரசவித்துள்ளார்.

தாய் மற்றும் குழந்தைகள் மற்றும் உடல்நலத்துடன் இருக்கின்றனர் எனவும் மருத்துவமனையில் தனியான முறையில் அவர்கள் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு குப்பியாவத்தையைச் சேர்ந்த 29 வயதுடைய குறித்த பெண் இரண்டு வாரங்களுக்கு முன்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# இரசாயனம் இன்றி பி.சி.ஆர் பாதிப்பு

கொழும்பு, டிசெ.18

முல்லேரியா ஆரம்ப மருத்துவமனையிலுள்ள பி.சி.ஆர். இயந்திரத்துக்கு தேவையான இரசாயன பதார்த்தம் இல்லாமையால், அதன் பரிசோதனை நடவடிக்கைகள் தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் பிரியந்த கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

பி.சி.ஆர். இயந்திரத்துக்கான இரசாயனப் பதார்த்தத்துக்கான கோரிக்கை விடுத்து பல நாள்கள் ஆகியும் இதுவரை கிடைக்கவில்லை. சுகாதார அமைச்சின் தலையீட்டுடனேயே இந்த இரசாயன பதார்த்தத்தை வெளிநாடுகளிலிருந்து கொண்டு வர முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# மகளை ஏற்றுவதற்குச் சென்ற தந்தை விபத்தில் உயிரிழப்பு

வவுனியா, டிசெ. 18

வவுனியா சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயத்துக்கு அருகில் கடந்த 7ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த நபர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

குறித்த பாடசாலையில் கல்விகற்கும் தனது மகளை ஏற்றிச்செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்த அவர் பட்டா வாகனம் மோதியதில் படுகாயமடைந்த. அவர் சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் இன்று உயிரிழந்தார். 56 வயதுடைய க.சிறிஸ்கந்தராஜா என்பவரே உயிரிழந்தவராவார். (ம-110)

பண்டிகைக்காலத்தை முன்னிட்டு

# சகல குடும்பங்களுக்கும் குறைந்த வட்டியில் கடன்

யாழ்ப்பாணம், டிசெ. 18

**பண்டிகைக் காலமான இக்காலத்தில் அனைத்துக் குடும்பங்களுக்கும் குறைந்த வட்டிவீதத்தின் அடிப்படையில் கடனுதவி வழங்க அரசு தீர்மானித்துள்ளது.**

10 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரையில் இந்தக் கடனுதவியை பெறலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பண்டிகைக்காலமான இந்தக் காலத்தில் மூன்று பிரிவுகளின் அடிப்படையில் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படவுள்ளது. மாதச் சம்பளமாக 50 ஆயிரம் ரூபா அல்லது அதற்கு மேல் உழைப்பவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்படும். 25 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரையில் உழைப்பவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்படும். 25 ஆயிரம் ரூபாவை விடவும் குறைந்த வருமானம் உடையவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற விரும்பும் அரச மற்றும் தனியார் அலுவலர்கள் தமது மேலதிகாரியின் ஒப்புதல் பெறப்பட்ட கடிதத்தை அருகிலுள்ள அரச வங்கியில் கையளிப்பதன் மூலம் அந்த ஊழியர்களின் கணக்கில் அந்தத் தொகை வைப்பி டப்படும். 10 மாதங்களில் இந்தத் தொகை திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்றுள்ளது. (ம)



## ஒட்டுசுட்டானில் 65 பேருக்கு பி.சி.ஆர்.

முல்லைத்தீவு, டிசெ.18

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிமனையின் ஏற்பாட்டில், ஒட்டுசுட்டான் சந்தை வளாகத்திலுள்ள வர்த்தகர்கள், முச்சக்கரவண்டிச் சாரதிகள், சந்தை வியாபாரிகள் உட்பட 65 பேருக்குப் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. (ற-19)

இழுவைப்படகு அத்துமீறல்

## 3 ஆவது நாள் போராட்டத்தில் மகளிர் அணியும் இணைவு!



முல்லைத்தீவு, டிசெ.18

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலை கண்டித்து முல்லைத்தீவு மாவட்டச் செயலக முன்றலில் கடந்த செவ்வாய்க் கிழமை ஆரம்பித்த போராட்டம் நேற்று வியாழக்கிழமை 3 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. சுழற்சி முறை போராட்டத்தில் நேற்று நாயாற்று கடற்தொழிலாளர் சங்கத்தினரும், முல் லைத் தீவு செல்வபுரம் பகுதி கடற் றொழில் சங்கத்தினரும் நாயாற்றுப் பகுதி மாதர் அபிவிருத்தி சங் கத்தினரும் இணைந்து கொண்டுள்ளனர். போராட்டத்தில் கலந்து கொண்ட மீனவ குடும்பப் பெண் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், இதில் மகளிர் இணைந்தது எமது கணவர்மார் தொழில் செய்து வந்தாலும் வீட்டில் இருக்கும் பெண்கள் தான் குடும்பத்தின் நிர்வாகத்தைக் கொண்டு செல்கின்றோம். இந்த இழுவைப் படகால் பல குடும்பங்கள் மிகவும் கஸ்ரமான நிலையை எதிர்நோக்கியுள்ளன. சந்ததியினர் தொழில் செய்ய முடியாத அளவுக்கு இழுவை படகுகள் அதிகரித்துள்ளன. கரையோரப் பகுதிகளைப் பார்வையிட்ட கடற்தொழில் அமைச்சர் முல்லைத்தீவு மாவட்ட மக்களைச் சந்திக்கவில்லை. மூன்றாவது நாளாகவும் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றோம் தீர்வு கிடைக்கும் வரை இந்தப் போராட்டம் தொடரும் என்று தெரிவித்தார். (ற-19)

## வலி.தெற்கு தவிசாளர் பதவி விலகவேண்டும்

*சு.க. உறுப்பினர் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், டிசெ.18

மருதனார்மடம் பொதுச் சந்தையில் கொரோனா வைரஸ் பரவல் கொத்தணிக்கான பொறுப்பை ஏற்று வலி.தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் பதவி விலகவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

வலி.தெற்கு பிரதேச சபையின் சிறப்பு அமர்வு தவிசாளர் எஸ். தர்சன் தலைமையில் கூடியது. அதன்போது, மருதனார்மடம் பொதுச் சந்தை வியாபாரிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் ஏற்பட்டமை தொடர்பில் உறுப்பினர்கள் சிலர் தவி சாளர் மீது குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இதன்போது மருதனார்மடம் பொதுச் சந்தை கொத்தணிக்குப் பொறுப்பேற்று தவிசாளர் பதவி விலக வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் தவராசா துவாரகன் கேட்டுக்கொண்டார். (ப)

## காலி கடுகொடவில் பயணக் கட்டுப்பாடு

காலி, டிசெ.18

கொரோனாத் தொற்றின் தாக்கம் அதிகரித்துச் செல்வதை அடுத்து காலியில் சில பகுதிகளுக்கு பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. காலி நகரசபைக்குட்பட்ட கடுகொட பிரதேசத்தின் சில பகுதிகளுக்கே இவ்வாறு பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது என அம்மாவட்ட துறைமுக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-இ)

## தனிமையிலிருந்த இருவருக்குத் தொற்று

கொழும்பு, டிசெ.18

வியட்நாம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து நாடு திரும்பிய இலங்கையர் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இருவரும் கடந்த 4 ஆம் திகதி நாடு திரும்பிய நிலையில், தனிமைப்படுத்தலுக்காக சிலாபம் பகுதியிலுள்ள ஹொட்டல் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர்.பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் கிடைக்கப் பெற்ற நிலையிலேயே, தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## 42 இலங்கையர்கள் தாயகம் திரும்பினர்

கொழும்பு, டிசெ.18

கொரோனாப் பரவல் காரணமாக கட்டார் சிக்கித் தவித்த 42 இலங்கையர்கள் நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (வ-இ)

## மருத்துவ அறையின் அவசியம்: ஆசிரியர்களுக்கான செயலமர்வு

சாவகச்சேரி.டிசெ.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மருத்துவ அறை உருவாக்குவதன் அவசியம் தொடர்பான செயலமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் வலயப் பாடசாலைகளின் பாடத்திட்டத்துக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கொரோனா காலத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நோய்வாய்ப் பட்டால் அவர்களைத் தங்க வைத்துப் பராமரிப்பதற்குரிய அறையின் முக்கி யத்துவம் தொடர்பாகக் கருத்துரைகளை வழங்கினர். (ஐ-9)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாற்றுவழியில்லா முடிவுகள்

குதிரைகள் ஓடிய பின்னர் லாயத்தை மூடும் காரியங்களையே இலங்கை அரசு தொடர்ந்து செய்து வருகின்றது. வடக்கின் அனைத்து சந்தைகளையும் மூடும் முடிவையும் அந்தவகையிலேயே நோக்க வேண்டியுள்ளது. மருதனார்மடம் சந்தையில் முதல் தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்டவுடனேயே இதைச் செய்திருக்க வேண்டும். ஏனெனில் மருதனார்மடத்தில் இனம் காணப்பட்ட தொற்றாளர், சீனாவில் போய் வைரஸை வாங்கி வரவில்லை. தம்புள்ளை பொருளாதார மையத்துக்குச் சென்று வந்தபோதே, அவரைக் கொரோனா பற்றிப் பிடித்துள்ளது. ஆகவே புதிய கொத்தணியின் உண்மையான மையம் தம்புள்ளைதான்.

தம்புள்ளையில் இருந்தே பெரும்பாலான சந்தைகளின் மொத்த வியாபாரிகளுக்கு மரக்கறி வகைகள் வந்து சேர்கின்றன. வடக்கில் சில மரக்கறிவகைகள் இங்கேயே பயிரிடப்பட்டாலும், தம்புள்ளையில் இருந்தும் ஏராளமான மரக்கறி வகைகள் இங்கு கொண்டுவரப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அப்படி மரக்கறிகளோடு சேர்ந்து இப்போது கொரோனாவும் வந்துவிட்டது. வடக்குக்கு வந்தது போலவே தம்புள்ளையில் இருந்து வேறு பகுதிகளுக்கும் கொரோனா சென்றிருக்கும் வாய்ப்புகள் மிக அதிகம். அதனால் அடுத்துவரும் நாள்களில் தம்புள்ளைக் கொத்தணி போட்ட குட்டிக் கொத்தணிகள் இனம்காணப்படாவிட்டால்தான் ஆச்சரியம். இந்த நிலையில் மருதனார்மடத்தில் கொரோனாத் தொற்றாளர் கண்டறியப்பட்டவுடனேயே, தம்புள்ளையோடு தொடர்புறும் சந்தைகளை உடனடியாக முடக்கி, தொற்று நீக்கம் செய்து, அங்குள்ள வியாபாரிகளுக்கு பி.சி.ஆர் சோதனைகள் செய்து, தொற்றாளர்களை அடையாளப்படுத்தியிருந்தால் பேராபத்தைத் தவிர்த்திருக்கலாம்.

ஆனால் நடந்தது என்ன? மருதனார்மடம் கொத்தணி உருவானவுடன் இரவோடிரவாகப் போடப்பட்ட முடக்கநிலை கூட அடுத்தநாளே எந்தக் காரணமும் இல்லாமல் நீக்கப்பட்டது. பின்னர் கட்டம் கட்டமாக ஒவ்வொரு சந்தையாகச் சென்று அங்குள்ளவர்களுக்கு பி.சி.ஆர் சோதனை செய்தபோதுதான், நிலைமை கைமீறிப் போய்விட்டது என்ற உண்மை புலப்பட்டது. அதனாலேயே இப்போது வடக்கின் அனைத்துச் சந்தைகளும் மூடப்படும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதீத அழுத்தம் கொண்ட நீரோட்டத்தை ஒருமுனையில் தடுத்தால், அது வேறு பல முனைகளால் பீறிட்டு பாய முனையும். அதேபோலதான் வடக்குச் சந்தைகளை மூடினாலும், தம்புள்ளையோடு தொடர்புடைய ஏனைய சந்தைகள் ஊடாகக் கொரோனாவின் ராஜபவனி தொடரவே செய்யும்.

இன்னொரு புறத்தில் வடக்கின் சந்தைகளை மூடினால், மக்களின் மரக்கறி உள்ளிட்ட சந்தைத் தேவைகளுக்கு மாற்றுவழி என்ன என்பதை சுகாதாரத் துறையோ, மாவட்டச் செயலகமோ இதுவரை அறிவிக்கவில்லை. சந்தைகளை மூடினால், வழக்கம் போல அவற்றை அண்டிய பகுதிகளில் சந்தை வியாபாரிகளே தங்கள் பொருள்களை கடை பரப்பி, விற்க முனைவார்கள். அவற்றை வாங்க மக்களும் முண்டியடிப்பார்கள். ஆக, புதிய மொந்தையில் பழைய கள்ளின் கதைதான். சந்தையை மூடினாலும் அந்த வியாபாரிகளுக்கு தொற்று இருந்தால், நடைபாதை வியாபாரங்கள் மூலமும் கொரோனா இன்னும் சுலபமாக தன் இருப்பை நிறுவ முனையும். எந்த முடிவை எடுப்பதாயினும் அதற்கான மாற்றுவழி என்ன, எதிர்விளைவுகள் எவை, அவற்றைத் தடுப்பதற்கான உபாயங்கள் யாவை என்றெல்லாம் தீர ஆராய்ந்தே செய்யவேண்டும். அதனை விடுத்து 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என முடிவுகளை எடுப்பதால் மக்களின் வாழ்வியல் அந்தரிப்பதுடன், கொரோனாவுக்கு நாங்களே ஆரத்தி எடுத்து வரவேற்கும் நிலையும் உருவாகும். இனியாவது உரியவர்கள் அதனை உணர்ந்து செயற்படுவார்களா?

# நத்தார் பண்டிகையில் களியாட்டம் வேண்டாம்

## பேராயர் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.18

நத்தார் பண்டிகையை முன்னிட்டு சுற்றுலாப் பயணம் மேற்கொள்வதையும், களியாட்ட நிகழ்வுகளை நடத்துவதையும் தவிர்த்துக்கொள்ளுமாறு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன், வீடுகளில் இருந்தே சுகாதார நடைமுறைகளை முழு மையாகப் பின்பற்றி நத்தார் பண்டிகையை கொண்டாடுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது;
மேல் மாகாணத்தில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது. எனவே, வெளியிடங்களில் இருந்து கொழும்பு வருவதையும், கொழும்பிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்வதையும் மட்டுப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். நத்தார் பண்டிகை காலத்தில் உறவினர்களின் வீடு களுக்குச் செல்வது வழமை. இம்முறை அதனைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. எல்லோரும் அவ்வாறு செல்ல நினைத்தால் வெளிமாவட்டங்களுக்கும் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் இருக்கின்றது. சுற்றுலா செல்லுதல், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் அதிகளவானவர்களின் பங்களிப்புடன் நத்தார் நிகழ்வுகளை நடத்துதல் என்பனவும் தவிர்க்கப்படவேண்டும். அவ்வாறான நிகழ்வுகளுக்கு செலவிடும் பணத்தை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குமாறும் கோருகின்றேன் - என்றார். (பு-44)



மன்னார் பிரதேச சபையில்

# ஒரு மேலதிக வாக்கால் நிறைவேறியது பாதீடு

மன்னார், டிசெ.18
மன்னார் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கால் வெற்றி பெற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.
மன்னார் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டமானது கடும் சர்ச்சைகளுக்கு மத்தியில் நேற்றுக் காலை 10 மணியளவில் மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் தலைமையில் சபையில் முன்வைக்கப்பட்டது.
அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வாதப் பிரதிவாதங்களை அடுத்து வரவு - செலவுத் திட்டம் வாக்களிப்புக்கு விடப்பட்டது. எனினும் ஒரு மேலதிக வாக்கால் வரவு -செலவுத் திட்டம் நிறைவேறியது. வாக்கெடுப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் , தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 10 உறுப்பினர்கள் இணைந்து ஆதரவாக வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 9 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்திருந்தனர். ஒரு உறுப்பினர் நடுநிலை வகித்ததோடு, மேலும் ஒரு உறுப்பினர் சபை அமர்வில் கலந்து கொள்ளவில்லை. (ப-56)

## சோளச் செய்கையில் படைப்புழுவா?

உடனே அறிவிக்கவும்

யாழ்ப்பாணம்,டிசெ.18
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சோளச் செய்கையின் போது படைப்புழுக்களின் தாக்கம் அவதானிக்கப்பட்டால் உடனடியாக மாவட்ட விவசாய திணைக் களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதி விவசாய பணிப்பாளர் திருமதி அஞ்சனாதேவி சிறிரங்கன் அறிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
கிழக்கு மாகாணத்தில் படைப் புழுக்களின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. அதே போன்று யாழ்ப்பாண மாவட்டத்திலும் இதன் தாக்கம் காணப்பட்டால் அவற்றை கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சோளப் பயிரில் இந்த படைப் புழுக்களின் தாக்கம் காணப்பட்டால் முன்கூட்டியே விவசாய பிரிவுக்கு தெரியப்படுத்தி அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் முன்வர வேண்டும் - என்றார். (ஐ-17)

# தனிப்பட்ட தகவல்களை வழங்க பொதுமக்கள் தயங்கவே கூடாது

## பொலிஸ் பேச்சாளர் வேண்டுகோள்

கொரோனாத் தொற்றுநோய் பரவுவதைத் தடுப்பதில் ஈடுபட்டுள்ள சுகாதார அதிகாரிகள், பொலிஸார் மற்றும் படையினர் கோரும் போது, தனிப்பட்ட தகவல்களை வழங்க எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்று பொதுமக்களிடம் பொலிஸ் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.
பொதுமக்கள் தொற்று நோய்களைத் தடுக்கும் சட்டத்துக்குள் கட்டுப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.
பொதுப்போக்குவரத்தில் பயணம் செய்யும் போது அல்லது வீடுகளை விட்டு வெளியேறும்போது பெயர், முகவரி, தொடர்பு விவரங்கள் மற்றும் தேசிய அடையாள எண் ஆகியவற்றை எழுதிய ஒரு பேப்பரை எப்போதும் வைத்துக்குமாறு அவர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார். படிவங்களை நிரப்புவதை விட இது போன்று செயற்படுவது சிறந்தது என்றும் அவர் தெரிவித்தார். (ப)

# அணைக்கட்டுக்களையும் நாசம் செய்யும் யானைகள்

## முல்லை. குளங்களில் இந்த நிலை

முல்லைத்தீவு,டிசெ.18
முல்லைத்தீவு மாவட்டத்தின் குளங்களின் அணைக்கட்டுகளுக்கு யானைகள் கூட்டமாக வருவதன் காரணமாக, அணைக்கட்டுகள் பெரும் சேதமடைந்து வருகின்றன என மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது குளங்களின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ள போதிலும் நடுக்குளங்கள் வழியாக நீந்தி வரும் யானைகள் குளங்களின் அணைக்கட்டுகளை சேதப்படுத்துகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அம்பலப்பெருமாள் குளம், தென்னியங்குளம், மல்லாவிக்குளம், தண்ணீர் முறிப்புக்குளம், முத்தையன்கட்டுக்குளம் ஆகியவற்றின் அணைக்கட்டுகள் யானைகளால் சேதமடைந்துள்ளன - என்றார். (ஐ-ரி2)




வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களது குடும்பங்களுக்கு உழைக்கும் மகளிர் அமைப்பினரால் உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-9)

# வாசிப்புத்திறனை அதிகரிக்க வீடுகளில் புத்தகங்கள் அவசியம்

## மன். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார்,டிசெ.18
ஒவ்வொரு வீட்டிலும் பத்துப் புத்தகங்களைக் கொண்ட நூலகங்களை அமைப்பதன் மூலம் மாணவர்களது வாசிப்புத்திறனை அதிகரிக்க முடியும். இவ்வாறு மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தெரிவித்துள்ளார்.

வை .கஜேந்திரன் எழுதிய வைரமுத்துக்கள் சிறுவர் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வாசிப்பு ஒரு மனிதனை உயர்ந்தவர் ஆக்கும். முன்னோர்கள் சிறு வயதிலிருந்து வாசிப்புப் பழக்கத்தை கடைப்பிடித்தனர். ஆனால் தற்போதைய சிறுவர்கள் தொலைபேசியிலும், தொலைக்காட்சியிலும் அதிக நேரங்களை செலவிடுவதை நாங்கள் காணக்கூடியதாக உள்ளது. சிறுவர்களுக்கான நூல்கள் வெளியிடும்போது வாசிப்பை நோக்கி அவர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் அமைய வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் பத்துப் புத்தகங்களையாவது கொண்ட சிறிய நூலகத்தை உருவாக்க வேண்டும். அதிலிருந்தே வாசிப்பின் மீதான ஆர்வம் சிறுவர்களுக்கு அதிகமாகும் - என்றார். (ஐ-213)

# திட்டமிடப்பட்ட அபிவிருத்தி இன்மையே மன்னார் மாவட்டம் பின்தங்கக் காரணம்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



மன்னார்,டிசெ.18
**திட்டமிடப்பட்ட அபிவிருத்தி இல்லாமையினாலேயே மன்னார் மாவட்டம் பின்தங்கிய நிலையில் உள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம். சாள்ஸ் தெரிவித்துள்ளார்.**

மன்னார் மாவட்டத்தில் நடைபெற்ற அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நடந்து முடிந்த போர் காரணமாக வடக்கு மாகாணத்தின் பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. மன்னார் மற்றும் வவுனியா மாவட்ட நகர பகுதிகள் பாதிக்கப் படவில்லை அப்படி இருந்தும் மன்னார் மாவட்டம் எந்த ஒரு அபிவிருத்திகளும் அற்ற பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது மன்னார் மாவட்டத்தில் செய்யப்பட்ட அபிவிருத்திகள் எவையும் திட்டமிடப்படாமல் செய்யப்பட்டவை. அத்துடன் நகரமயமாக்கல் திட்டமிடல் இல்லை கிராமங்களுக்கும், நகரத்துக்குமான தொடர்புகளை மேம்பாடுத்தும் திட்டங்கள் இல்லை. மன்னாரில் பிரதான தொழிலாக காணப் படும் மீன்பிடி மற்றும் நெல்லுக்கான தொழிற்சாலைகள் அமைக்கப்படவில்லை. இந்நிலையில் அபிவிருத்தி திட்டங்களை முன் மொழியும் அனைத்து தரப்பினரும் கலந்து ஆலோசித்து, நீண்டகால திட்டத்துடன் நிலையான அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும் போது மாவட்டத்தின் நிலை மாற்றம் பெறும் - என்றார். (ஐ-213)



# இரணைமடுக் குளத்தில்

## மீன் குஞ்சுகள் வெளியேறாமல் பாதுகாப்பு வலைகள் அமைப்பு

கிளிநொச்சி, டிசெ.18
இரணைமடுக் குளத்திலிருந்து மீன் குஞ்சுகள் வெளியேறாமல் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு வலைகள் அமைக்கும் பணிகள், நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இரணைமடு மீனவர் தொழில் வாடியில் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் வை.தவசாந்தன், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்.மாவட்ட நன்நீர் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் உத்தியோகத்தர் சங்கீதன், வடக்கு மாகாண நீர்பாசன பணிப்பாளர், இரணைமடு நீர்பாசன பொறியியலாளர் மற்றும் மீனவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப)

# வினைத்திறனாக செயற்படும் கலைவாணி தாய்மார் கழகம்

கொடிகாமம்,டிசெ.18
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட வரணி இயற்றாலை கிராம அலுவலர் பிரிவில் இயங்கும் கலைவாணி தாய்மார் கழகத்தின் செயற்பாடுகள் வினைத்திறனுடையன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் தாய்மார் இந்தக் கழகத்தில் அங்கத்தவர்களாக உள்ளனர். இந்தப் பிரிவிலுள்ள 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்துவதை மையமாக வைத்து இது இயங்கி வருகிறது. முதற்கட்டமாக சத்துமா தயாரிப்பு மற்றும் வீட்டுத் தோட்டத்தை மேம்படுத்தல், வறுமைக்கோட்டுக்குட்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குதல், குறைந்த வட்டிக்கு கடன் வழங்குதல், பிரதேச சுகாதாரத்தை மேம்படுத்த உதவுதல், உணவு கையாளும் நிலைமைகளைக் கண்காணித்தல், உணவகங்களில் சுகாதாரத்தை மேம்படுத்தல், போன்ற செயற்பாடுகளில் கலைவாணி தாய்மார் கழகம் சிறப்பாக செயற்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-159)

# குளங்களில் தேங்கி நிற்கும் வெள்ளத்தை அகற்ற நடவடிக்கை

தென்மராட்சி பிரதேசத்தில் வெள்ளம் தேங்கி மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் குளங்களில் காணப்படும் நீரை வாய்க்கால்கள் வெட்டி அப்புறப்படுத்த வேண்டும் என்று தென்மராட்சி பிரதேச செயலர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பிரதேசத்தில் உள்ள பல குளங்கள் வெள்ளத்தால் நிறைந்து அயலில் உள்ள குடும்பங்கள் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை காணப்படுகிறது. போதிய வடிகால் வசதிகள் இல்லாததால் ஆயிரத்துக்கு மேற்பட்ட நெல் வயல்களில் பயிர்கள் அழிந்துள்ளன. இவற்றுக்கு உடனடியாகத் தீர்வு காணும் வகையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிக்கை வழங்க வேண்டும் - என்றார். (ஐ-9)

# மையவாடி விவகாரத்தால் வவு. நகரசபையில் குழப்பம்

வவுனியா,டிசெ.18
வவுனியா பட்டாணிச் சூர் பகுதியில் அமைந்துள்ள இஸ்லாமிய மையவாடி விவகாரத்தால் வவுனியா நகரசபையின் நேற்றைய அமர்வு ரணகளமானது.

வவுனியா நகரசபையின் இந்த வருடத்துக்கான இறுதி அமர்வு தவிசாளர் இ. கௌதமன் தலைமையில் நேற்று இடம் பெற்றது. இதன்போது நகரசபை உறுப்பினர் சு.காண்டீபன், மன்னார் வீதியில் அமைந்துள்ள இஸ்லாமிய மையவாடியிடி ஒருபகுதியில் மண்மூடி இஸ்லாமிய கலாசார நிலையம் அமைக்கப்படவுள்ளமை தொடர்பில் சபையில் பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார்.




முன்மொழிவை அடுத்து அப்துல்பாரி, முகமது லறீப் தங்களது ஆட்சேபனைகளைத் தெரிவித்தனர். இதனால் உறுப்பினர்களான காண்டீபன், மற்றும் லறீப், பாரி ஆகியோருக்கு இடையில் கடுமையான முரண்பாடு ஏற்பட்டது. இதனை அடுத்து சபையின் மூத்த உறுப்பினர்கள் இடையிட்டு தங்களுடைய கருத்தை முன்வைத்ததை அடுத்து நிலமை கட்டுக்குள் வந்தது. (ப-110)

# மன்னாரிலிருந்து வெளியிடத்துக்கு மணல் கொண்டு சென்றால் கைது

## வடக்கு ஆளுநர் நடவடிக்கை

மன்னார், டிசெ.18
மன்னார் தீவுக்குள் இருந்து மணல் அகழ்ந்து வெளியிடங்களுக்கு கொண்டுசெல்வோரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எம். சாள்ஸ் தெரிவித்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் விடுத்த வேண்டுகோளை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"மன்னார் தீவை அண்டிய பகுதிகளில் மீன் வளர்ப்பு எனக் கூறி, மணல் அகழப்பட்டு வெளியிடங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் எதிர்காலத்தில் மன்னார் தீவு அழிந்துபோகும் சாத்தியங்களே உள்ளன. மன்னார் தோட்டவெளிப் பகுதியில் மாவட்ட அபிவிருத்தி குழுவால் தடை செய்யப்பட்டிருந்த மீன் வளர்ப்பு போர்வையிலான மணல் அகழ்வு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தனியார் நிறுவனம் ஒன்று மன்னார் பேசாலைப் பகுதியில் ஆராய்ச்சி செய்து அங்குள்ள மணல்களில் இல்மனைற் கணிமம் இருப்பது உறுதி செய்யப்பட்டு பல ஆயிரம் கீப் மணல் கொண்டு செல்வதற்கான முயற்சியில் இறங்கியுள்ளது. மன்னார் மக்களுக்கு பாதகமான எந்த ஒரு செயற்பாட்டையும் நாங்கள் ஏற்கவோ அனுமதிக்கவோ போவதில்லை. எனவே மன்னார் தீவுக்குள் இருந்து மணல் அகழ்வுசெய்வதையும் அது வெளியில் கொண்டுசெல்வதையும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் ஆளுநரிடம் கோரினார்.
இதற்குப் பதிலளித்த ஆளுநர்; உடனடியாக மன்னார் தீவுக்குள் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வுகள் நிறுத்தப்படவேண்டும். அந்தந்த பிரதேச செயலாளர்களின் அனுமதி இல்லாமல் எவரும் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ள முடியாது. மணல் அகழ்வு செய்து வெளியில் கொண்டு செல்லப்படும் வாகனங்களை கைதுசெய்ய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ப-213)

## யாழ்.மாநகரில் இருவருக்கு டெங்கு




யாழ்ப்பாணம்,டிசெ.18
யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் டெங்கு நோயால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டுள்ளனர். கொழும்புத்துறை வளன்புரம் பகுதியைச் சேர்ந்த தாய் மற்றும் மகன் ஆகிய இருவருமே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.
இந்த மாதத்தில் இதுவரைக்கும் இவர்கள் இருவர் மட்டுமே டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். குறித்த பிரதேசத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ-17)

# புதிய அரசமைப்பில் தமிழர்களின் கருத்தையும் உள்வாங்கவேண்டும்

## சிறிதரன் எம்.பி. வேண்டுகோள்

**கிளிநொச்சி, டிசெ.18**
**தமிழர்களின் எண்ணங்களையும் உள்வாங்கி புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.**

புதிய அரசமைப்பும் தமிழர்களின் முன்மொழிவும் எனும் தலைப்பில் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் இணைய வழி மூலமான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தலைமை யில் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
இதுவரை உருவாக்கப்பட்ட அரசமைப்புக்கள் யாவும் தமிழர்களின் கருத்துக்களையும் உணர்வுகளையும் பிரதிபலிக்காது சிங்கள அரசியல் தலைவர்களின் எண்ணங்களுக்கும் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தும் வகையிலுமே உருவாக்கப்பட்டிருக்கிறது. சிங்களத் தலைவர்களால் முன்மொழி யப்பட்ட தமிழர்களின் உரிமை சார்ந்த விடயங்கள் கூட உள்வாங்கப்படவில்லை. அரசமைப்பிலும் தமிழர்கள் புறக்கணிக் கப்பட்டதாலேயே எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராடினார்கள். தமிழ் தலைவர்களினதும் தமிழ் புத்திஜீவிகளி னதும் தமிழ் மக்களதும் கருத்துக்களை கேட்டு அறிய வேண்டும் - என்றார். (ப)



புரேவிப் புயல் மற்றும் வெள்ளப் பாதிப்பு ஆகிய வற்றுக்குள்ளான வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.
வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி ஊழியர் நலன்புரிச் சங்கம் அதன் இடர்கால நிதியத்தில் இருந்து அந்த நிவாரணங்களை வழங்கியது நிவாரணம், நேற்று முன்தினம் கொத்தணி மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது. (ப-63)

## சுகாதாரப் பரிசோதகர் வேடத்தில் கொள்ளையிட்ட கும்பல் கைது

கொழும்பு, டிசெ.18
பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்போகிறோம் எனக்கூறி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வேடத்தில் வீட்டுக்குள் புகுந்து கொள்ளையிட்ட கும்பல் இரண்டரை மாதங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,
மஹறவ பொலிஸ் பிரிவின் அம்பன்பொல - கெத்தப்பஹுவ பகுதியில் கடந்த ஒக்ரோபர் 29 ஆம் திகதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களாக தம்மை அடையாளப்படுத்திக்கொண்டு பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுக்கப் போகிறோம் எனத் தெரிவித்து, வீடொன்றில் சுமார் மூன்றரை பவுன் தங்கம் உள்ளிட்ட பொருள்களை கும்பல் ஒன்று கொள்ளையிட்டுச் சென்றுள்ளது. கொள்ளை தொடர்பில் மஹறவ பொலிஸாரும் நிக்கவரெட்டிய சிறப்பு குற்றத் தடுப்புப் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர். இந் நிலையில், குருநாகல் பொலிஸ் நிலையத்தின் குற்றவியல் பிரிவினர் முன்னெடுத்த பிரிதொரு சம்பவம் தொடர்பான விசாரணைகளில் இந்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 34,36 வயதுகளை உடைய மினுபங்கொட, உடுகம்பொல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரும், ஜா-எல பகுதியைச் சேர்ந்த 60, 37 வயதுகளை உடைய தாயும் மகளுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். மேலும், சந்தேகநபர்கள் கைதாகும்போது அவர்களிடம் போதைப் பொருளும் இருந்ததாக குறிப்பிட்ட பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண, அதனடிப்படையில் அவர்களுக்கு எதிராக விஷேட தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெறுகிறது - என்றார். (வ-இ)

## அனுமதியற்ற வியாபார நிலையம் தொடர்பில் நடவடிக்கை வேண்டும்

*வவு. நகரசபை உறுப்பினர் வலியுறுத்து*

வவுனியா.டிசெ.18
வவுனியா கொறவப்பொத்தானை வீதியில் நகரசபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள வியாபார நிலையம் மக்கள் மத்தியில் தவறான ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளது என்று சபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் மோகன் குற்றம் சாட்டினார்.
வவுனியா நகரசபையின் இந்த வருடத்துக்கான இறுதி அமர்வு தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குற்றம் சாட்டினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
அனுமதியற்ற வியாபார நிலையம் தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குறித்த வியாபார நிலையத்துக்கு வழக்குத் தாக்கல் செய்யக்கோரி நீண்டகாலமாகியும் அது நடைமுறைக்கு வரவில்லை. மூன்று வருடங்களாக இந்த விடயத்தை கதைத்துகொண்டிருக்கின்றோம். விரைவாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும், ஏனெனில் அந்த வியாபார நிலையத்தை சார்ந்தவர் சபையில் உள்ள பலருக்கு 50 லட்சத்துக்கும் மேல் பணம் வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கின்றார்.
எனவே இதனை இப்படியே விட்டுவிட முடியாது. உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அடுத்த சபை அமர்வுக்குள் இதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். உண்மை கண்டறியப்பட வேண்டும் என்றார். (ஐ-110)

## பொதுச் சந்தைகளில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம்,டிசெ.18
யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் உள்ள பொதுச் சந்தைகளில் சுகாதாரப் பிரிவினர் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.
இதன்போது நாவாந்துறை மீன் சந்தையில் முகக்கவசம் அணியாமல் நின்ற 30 க்கு மேற்பட்டோர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். சந்தைக்கு வருபவர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்து சுகாதார நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். இவ்வாறு சுகாதார நடைமுறையைப் பின்பற்றத் தவறும் முகக்கவசம் அணியாமல் வருபவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-17)

# சிறையிலிருந்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு நடந்தது என்ன?

## இராதாகிருஷ்ணன் எம்.பி கேள்வி



நுவரெலியா, டிசெ.18

**இலங்கையில் அரசியல் கைதிகளென எவரும் இல்லையெனில் இருந்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு என்ன நடந்தது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

இலங்கையில் அரசியல் கைதிகளென எவரும் இல்லை. அவ்வாறு இருந்தால் ஒருவரின் பெயரையாவது, அவ்வாறு கூறுபவர்கள் வெளியிடவேண்டும் என்று உதய கம்மன்பில அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது கருத்து வெளியிட்டிருந்தார். இது தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர், மேலும் தெரிவித்ததாவது;

அமைச்சர் உதய கம்மன்பிலவின் கருத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது. தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான விவரங்களை பல தடவைகள் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார். நாமும் அது பற்றி கதைத்துள்ளோம். நல்லாட்சியின் போது தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அப்படியானால் இருந்த கைதிகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் இருக்கின்றனரா அல்லது இல்லாமல் செய்யப்பட்டுள்ளனரா என்ற சந்தேகம் எழுகின்றது. - என்றார். (ப)

# அரசியல் கைதிகளை விடுவிக்க அதிக ஆசனங்கள் கேட்ட டக்ளஸ்

வவுனியா,டிசெ.18

ஈ.பி.டி.பி கட்சிக்கு அதிகமான ஆசனங்களைத் தந்திருந்தால், அரசியல் கைதிகளை விடுவித்திருக்க முடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியா, போகஸ்வெவ பகுதியில் மின் இணைப்புப் பணியை ஆரம்பித்து வைத்த அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

"நானும் ஒரு அரசியல் கைதியாக இருந்தவன் தான். 1983 ஆம் ஆண்டு சிறை உடைப்பு மூலம் யாரையும் நம்பாமல் நாங்களே எங்களை விடுவித்தோம். பின்னர் இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் எமக்கு பொதுமன்னிப்புக் கிடைத்தது. அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும். அதற்கான முயற்சியைச் செய்வேன். அவர்களில் என்னை கொல்லவந்தவர்களும் இருக்கின்றனர். எனக்கு அதிக ஆசனங்களைத் தந்திருந்தால் இதனை இலகுவாகத் தீர்த்திருக்கலாம்" - என்றார். (ப-110)

# மழைக்கு சாத்தியம்



யாழ்ப்பாணம், டிசெ. 18

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

நாட்டில் வடகிழக்கு பருவப்பெயர்ச்சி நிலைமை படிப்படியாக உருவாகி வருகின்றது. வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் பி.ப. 2மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலைவேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது. கொழும்பிலிருந்து புத்தளம், மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றுள்ளது. (ப)

# ஆசிரிய மாணவர்களின் விவரம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.18

2016 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் படிப்புகளை முடித்த ஆசிரிய மாணவர்களுக்கு பொருத்தமான ஆசிரியர் நியமனங்கள் வழங்குவதற்காக இணையத்தின் ஊடாக தகவல்களைப் பெறும் திட்டத்தை கல்வி அமைச்சு ஆரம்பித்துள்ளது. அதன்படி, கல்வி அமைச்சுக்கு தகவல்களை வழங்குவதற்கான இறுதித் திகதி வரும் டிசெம்பர் 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. www.ncoe.moe.gov.lk என்ற இணையதளத்தின் மூலம் பயிற்சியாளர்கள் தங்கள் தகவல்களை உள்ளிடலாம் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ப)



# வட்டு.உப்புவயல் குளம்

## இராணுவத் தளபதியால் திறப்பு

வட்டுக்கோட்டை. தென்மேற்கு உப்பு வயல் குளம் இராணுவத்தளபதி சவேந்திரா சில்வாவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ் .மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியின் வழிகாட்டலில், தியாகி அறக்கொடை நிறுவனத்தி னரின் நிதிப் பங்களிப்பில் வட்டுக்கோட்டை தென்மேற்கு உப்புவயல் குளம் சீரமைப்பு செய்யப்பட்டு பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார, யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன், யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதுவர், வலி. மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் ,வடக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் மற்றும் இராணுவ உயரதிகாரி கள் கலந்து கொண்டனர். (ப-20)

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த பாதீட்டில் ரூ.10,000 மில்லியன்

## பசில் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.18

வாழ்வாதாரத்தையும் வருமானத்தையும் மேம்படுத்துவதில் நாட்டின் பொருளாதாரம் தங்கியுள்ளதால் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் அதற்காக 10 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் திரு.பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

"எதிர்வரும் 21 மற்றும் 22 ஆகிய தினங்களில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கள் அனைத்தையும் கூட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். அந்தக் குழுக்கள் அழைக்கப்பட்டு ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு குறைந்தபட்சம் ஒரு 'கிராமத்துடன் கலந்துரையாடல்' வேலைத்திட்டத்தை நடத்தி கிராம மட்டத்தில் கருத்துக்களை பெற்றுக்கொள்ளுங்கள். இந்த வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்தும்போது பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் முன் மொழிவுகளை பெற்றுக்கொள்வதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பெரும் பொறுப்புண்டு. டிஜிட்டல் இலங்கையை உருவாக்குவதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார். இதற்கமைய இலங்கையிலுள்ள அனைவருக்கும் தங்களது வீடுகளிலிருந்து தேவையான தகவல் தொடர்பு சேவைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்கிறோம் " -என்றார் அவர். (ப)



# கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டம்

ஹற்றன்.டிசெ.18

ஹற்றன் - கொட்டக்கலை நகரங்களில் உள்ள தோட்டப் பகுதிகளில் கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டம் முன்னெ டுக்கப்பட்டது.

"கொவிட் - 19 தொற்றில் இருந்து மக்களை காப்போம்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு சுவரொட்டி கள் ஒட்டப்பட்டதுடன், துண்டுப்பிரசு ரங்களும் விநியோகிக்கப்பட்டன. (ஐ)



# நன்றி நவிலல்

பிறப்பு 25 . 05 . 1939



மறைவு 17 . 11 . 2020

திருமதி நாகம்மா சின்னத்தம்பி

17.11.2020 அன்று சிவபதப்பேறு அடைந்த எமது அன்புத் தெய்வம் திருமதி. நாகம்மா சின்னத்தம்பி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இடைக்காடு தீர்த்தக்கரையில் 17.12.2020 நடைபெற்றது. ஆத்மசாந்திப் பிரார்த்தனை, கொரோனா நிலைமை காரணமாக, 18.12.2020 அன்று விளையாட்டரங்க வீதி கல்வியங்காட்டில் அமைந்துள்ள எமது இல்லத்தில் மிக எளிமையாக நடைபெறுகிறது. துயர்பகிர்வில் கலந்துகொண்ட எல்லோரையும் அழைக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

எமது அன்புத்தெய்வம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் நேரிலும் வேறு வழிகளிலும் கலந்துகொண்டு அன்னாருக்கு அஞ்சலியும் எமக்கு ஆறுதலும் வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் பல்வேறு வகைகளிலும் இன்று வரை எம்மோடு கைகோர்த்து நிற்கும் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பேராசிரியர் க.சின்னத்தம்பியும் குடும்பத்தினரும்



# 2021 உங்கள் ராசிக்கு எப்படி?

## ஆங்கிலப் புத்தாண்டு பலன்கள்




ரிஷப ராசியில் பிறந்த உங்களுக்கு சனி பகவான் ஒன்பதாம் வீட்டில் பெயர்ச்சி ஆவார். ராகு கேது முறையே 1 மற்றும் 7 ஆகிய இடங்களில் இருப்பார்கள். செவ்வாய் பகவான் உங்கள் ராசியிலிருந்து பன்னிரண்டாம் இடத்தில் இருக்கப் போகின்றார். மேலும் அவ்வாண்டின் குரு பெயர்ச்சிக்கு பிறகு உங்களுடைய ராசியின் நான்காம் வீட்டை அவர் பார்வையிடுவார்.

இதனால் உங்களுக்கு இந்த ஆண்டு ஏற்ற இறக்கத்துடன் இருக்கப் போகின்றது. இன்பம் வந்தாலும் அதிகமாகவும், துன்பம் வந்தாலும் அதிகமாகவும் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. எதிர்பார்ப்புகளை நீக்கி, வருவது வரட்டும் என்கிற மனப்பான்மை இருந்தால் நடப்பதெல்லாம் நன்மையாகும்.

**குடும்பம்:**
குடும்பத்தைப் பொறுத்தவரை ரிஷப ராசிக்காரர்களுக்கு வர இருக்கும் இந்த ஆண்டு நல்ல பலன்களையே கொடுக்கும்.

அடிக்கடி சண்டை, சச்சரவுகள் ஏற்பட்டாலும், அதனால் பெரிய பாதிப்புகள் ஒன்றும் உண்டாகப் போவதில்லை.

குடும்ப விஷயங்களை மூன்றாம் நபர்களிடம் பகிர்ந்து கொள்வதை தவிர்ப்பது உத்தமம். குடும்பத்தில் இருக்கும் அனைவரும் யாராக இருந்தாலும் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் நடந்து கொள்வது நல்ல பலனைக் கொடுக்கும்.

குறிப்பாக கணவன் மனைவிக்கு இடையே புரிதல் உருவாகும். இதுவரை எலியும், பூனையுமாக இருந்தவர்கள் கூட நட்புறவாக மாறிவிடுவார்கள்.

**வியாபாரம் மற்றும் தொழில்:**
தொழில் மற்றும் வியாபாரத்தில் ரிஷப ராசிக்காரர்களுக்கு எதிர்பார்த்த உயர்வுகள் உண்டாகும். இதுவரை மந்த நிலையில் இருந்து வந்த உங்களுடைய தொழில் படிப்படியாக முன்னேற்றம் அடையும் வாய்ப்புகள் உண்டு. வாடிக்கையாளர்களை கவர்வதற்கு புதிய யுக்திகளை கையாளுவீர்கள். சனி பகவான் அமர இருக்கும் இடம் உங்களுக்கு சாதகமாக இருப்பதால் தொழில் சார்ந்த விஷயங்களில் பெரும் பாதிப்புகள் ஒன்றும் ஏற்படாது. வருட இறுதியில் புதிய மாற்றங்கள் நிகழக்கூடிய வாய்ப்புகள் உண்டு. எடுக்கும் முயற்சிகள் வெற்றி அடையும்.

**உத்தியோகம்:** உத்தியோகத்தில் இருக்கும் ரிஷப ராசிக்காரர்களுக்கு புதிய வாய்ப்புகள் நோக்கிய பயணத்தில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். எதிர்பார்க்கும் பதவி உயர்வும் எளிதாகக் கிடைக்கும். இதனால் ஊதிய உயர்வும் சாதக பலனையே கொடுக்கும். தீய நண்பர்களின் சகவாசத்தை குறைத்துக் கொள்வது உத்தமம். நீங்கள் தெரிந்தே செய்யும் தவறுகளுக்கு எப்பொழுதும் மன்னிப்பு என்பதே கிடையாது. செய்த தவறுக்கு உரிய பலனையும் அனுபவிப்பீர்கள்.

**பொருளாதாரம்:**
செவ்வாய் பகவான் 12 இல் இருப்பதால் தாராள தன வரவு விரயம் ஆகிக்கொண்டே இருக்கும். ஒருபுறம் பணம் வந்து கொண்டே இருந்தாலும், இன்னொரு புறம் வேறு வழியாக சென்று கொண்டே இருக்கும். நீங்கள் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் அதனை தவிர்க்க இயலாது. திடீர் தனவரவு அதிர்ஷ்டம் தரும் வகையில் இறுதியில் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் அமையும். கிடைக்கும் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்திக் கொண்டால் முன்னேற்றம் நிச்சயம்.

**பெண்களுக்கு:**
ரிஷப ராசியில் பிறந்த பெண்களுக்கு இவ்வாண்டு நல்ல பலன்களைக் கொடுக்க இருக்கிறது. ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாவதற்கு வாய்ப்புகள் உண்டு. சுய தொழிலில் பிரகாசிக்க நினைக்கும் பெண்களுக்கு எவ்வளவு இடையூறுகள் ஏற்பட்டாலும் கிரகங்களின் ஆட்சி பலத்தால் வெற்றியைக் காண்பீர்கள். வாழ்க்கையில் இதுவரை பட்ட கஷ்டங்களை எல்லாம் தாண்டி அடுத்த படிக்கு முன்னேற்றம் காண்பீர்கள். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தேவையற்ற உணவுகளை தவிர்த்து நல்ல உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொண்டால் உற்சாகம் நிச்சயம் உண்டாகும்.

**பரிகாரம்:**
குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வதும் ரிஷப ராசிக்காரர்களுக்கு நல்ல பரிகாரமாக அமையும். நினைத்தது நடக்க சனிக்கிழமைகளில் வாயில்லா ஜீவன்களுக்கு உணவளியுங்கள் நல்லது நடக்கும்.

---




# 67 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம், டிசெ.18

புரேவி புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, நலன்புரி முகாமில் தங்கியிருந்த காக்கைதீவு கிராமத்தைச் சேர்ந்த 67 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

வலுவிழந்தோரை தாங்குவோம் சுவிட்சர்லாந்தை சேர்ந்த அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி பொ. சண்முகசுந்தரத்தால் இந்தப் பொதிகள் வழங்கப்பட்டன.

உயரப்புலம் மெதடிஸ மிசன் வித்தியாலய ஆசிரியர் ம.சந்தரூபனின் வேண்டுகோளுக்கிணங்க இந்த உதவித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. (ற-இ)

# கல்முனையில் பல இடங்கள் தனிமைப்படுத்தப்பட்டன

கல்முனை, டிசெ.18

கல்முனை செய்லான் வீதியிலிருந்து அம்மன்கோயில் வரை உள்ள பாதைகள் மற்றும் அனைத்து பிரதேசங்களும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக கல்முனை மாநகர முதல்வரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை கடற்கரைப்பள்ளி வீதியில் நேற்று முன்தினம் மேற்கொண்ட அண்டிஜன் பரிசோதனையில் சுமார் 15 க்கு மேற்பட்டவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து மேலும் தொற்றாளர்களை இனங்காணும் வரைக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் கல்முனை செயிலான் வீதி,கடற்கரைப் பள்ளி வீதி,மாதவன் வீதி மாரியார் வீதி,சின்னத்தம்பி வீதி,உடையார் வீதி, கோயில் வீதி வரையான இடங்கள் தனிமைப்படுத்தல் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (வ-இ)

# உயர் அதிகாரிகளுக்கு தொற்று இல்லை!!

வவுனியா, டிசெ.18

வவுனியாவில் உயர் அதிகாரிகளுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவு நேற்று கிடைக்கப்பெற்றது. அதன்படி குறித்த அதிகாரிகள் எவருக்கும் தொற்று இல்லை என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா நீதிமன்றில் பணியாற்றும் அரச சட்டவாதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது. குறித்த சட்டவாதி பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தார்.

இதனையடுத்து வவுனியா நீதிமன்றில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் மாவட்டச் செயலகத்தின் உயர் அதிகாரிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-110)

# கட்டு. விமான நிலைய ஊழியருக்குத் தொற்று

கொழும்பு, டிசெ.18

கட்டுநாயக்க விமான நிலையத்தின் பெண் சுத்திகரிப்பு தொழிலாளர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சிலாபம் ஆராச்சிகட்டுவ பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதையடுத்து அவருடன் பணியாற்றிய மேலும் 10 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை நேற்று மேற்கொள்ளப்பட்டதுடன் அவருடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய ஏனையவர்களைக் கண்டறியும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (வ-இ)

### உத்தரவை மீறி

# கல்வி நிலையங்களை திறந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### வவுனியா தவிசாளர் எச்சரிக்கை

வவுனியா, டிசெ.18

**கொ**ரோனாப் பரவல் வவுனியாவில் அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு நகரில் அமைந்துள்ள அனைத்து தனியார் கல்விநிலையங்கள் மற்றும், பிரத்தியேக வகுப்புக்களை உடனடியாக இடைநிறுத்துமாறு வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், வவுனியா மாவட்டத்தில் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த வகையில் நகருக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்களின் கல்விச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு உரிய தரப்புகளுக்கு அறிவித்தல் விடுக்கின்றோம்.

கொரோனாத் தாக்கத்தை கருத்தில் கொண்டு ஏற்கனவே தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் பலர் இரகசியமான முறையில் மாணவர்களை வரவழைத்து கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உத்தரவுகளை மீறி செயற்படுவோர் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தார். (வ-110)

# கைதிகளின் உடல்களின் துப்பாக்கிச் சூட்டுக் காயம்

### சடலங்களை அடக்கம் செய்வதற்கான கோரிக்கை நீதிமன்றால் மறுப்பு

கொழும்பு, டிசெ. 18

மஹர சிறைச்சாலை களேபரத்தில் கொல்லப்பட்ட 4 கைதிகளின் உடல்களை அடக்கம் செய்வதற்கான கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மஹர சிறைச்சாலை மோதலில் உயிரிழந்த கைதிகளுள் 4 பேரின் சடலங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையின் அறிக்கைகளை, அதுதொடர்பாக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்வைத்தது.

அதில் அவர்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களாலேயே உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது சட்டமா அதிபர் திணைக்களமும், உயிரிழந்த கைதிகள் தரப்பு சட்டத்தரணிகளும் நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

உடற்கூற்றுப் பரிசோதனை நிறைவு செய்யப்பட்ட நான்கு கைதிகளின் உடல்களையும் இறுதிக் கிரியை மேற்கொள்வதற்காக அவர்களது உறவினர்களிடம் கையளிக்குமாறு அவர்களது சட்டத்தரணிகள் கோரினர்.

இதற்கு சட்டமாஅதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான, சட்ட மா அதிபரின் இணைப்பாளர் நிஷ்ரா ஜெயரத்ன, எதிர்ப்பை வெளியிட்டார்.

அவர்கள் உடல்களை அடக்கம் செய்வதானது, சமூகத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று அவர் நீதிமன்றில் சுட்டிக்காட்டினார். நீதிமன்றில் இடம்பெற்ற வாதங்களை செவிமடுத்த நீதிவான், அவற்றைத் தகனம் செய்வதற்கு உத்தரவிட்டார். (ஒ.இ)

## சிறைச்சாலைகளில் மேலும் 63 தொற்றாளர்

கொழும்பு, டிசெ.18

சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட மேலும் 63 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் சிறைச்சாலை அதிகாரிகள் மூவரும், 56 ஆண் கைதிகளும், 4 பெண் கைதிகளும் உள்ளடங்குகின்றனர்.

இதையடுத்து, சிறைச்சாலைகளில் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 279 ஆக அதிகரித்துள்ளது. (ந-இ)

# கிணறு உடைந்ததால் அபாய நிலையில் கடை

முல்லைத்தீவு, டிசெ.18

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மூங்கிலாற்று கிராமத்தில் பிரதான வீதிக்க ருகில் குடியிருப்பாளரின் வீட்டுக் கிணறு உடைந்து வருவதால், அருகில் உள்ள வணிக நிலையக் கட்டடம் இடிந்து விழும் அபாய நிலையில் காணப்படுகின்றது என்று கடை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

தொலைபேசி கடை ஒன்றை வைத்திருக்கும் உரிமையாளர் இந்த ஆபத்து குறித்து கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

எனினும் காணி உரிமையாளருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

காணியின் உரிமையாளர் கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் கிணற்றைக் கட்டு கிறேன் எனக் கூறிவந்தார். இந்த நிலையில் அண்மையில் பெய்த கடும் மழையால் கிணறு உடைந்து கடையின் கட்டடத்துக்கு அருகில் உடைப்பு எடுத்துள்ளது.

தொடர்ந்து மழை பெய்தால் கடைக்கு ஆபத்தான நிலை ஏற்படும் என அரச அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கடை உரிமையாளர் தெரிவித்துள்ளார். (ந-19)

## ஈஸ்டர் தாக்குதல் நிவாரணம்: பாராட்டுகிறார் மெல்கம் ரஞ்சித்

கொழும்பு, டிசெ.18

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்தமை தொடர்பில் பிரதமர் உள்ளிட்ட அரசைப் பாராட்டுகின்றேன் என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்று முன்தினம் தெரிவித்தார். பிரதமரின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் நிறைவிலேயே பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது பிரதமர் உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீட்டுத் திட்டப் பணிகள், மருத்துவ வசதிகளை விரிவுபடுத்திக் கொடுத்தல், கடன் நிவாரணங்கள், அறநெறிப் பாடசாலை மற்றும் சேதமடைந்த தேவாலயங்களின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்தல் போன்ற பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (ந-இ)



## பணியாளர்களுக்கு உணவுப் பொதிகள்

கொடிகாமம், டிசெ.18

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருக்கு உலர் உணவுப் பொதிகள் கடந்த திங்கட்கிழமை சங்கத்தின் தலைவர் க.செல்வேஸ்வரன் தலைமையில் வழங்கப்பட்டது.

இதன்போது 275 சங்கத்தின் அங்கத்தவர்களுக்கும், 32 பணியாளர்களுக்கும், 18 முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் தலா 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ந-159)

### விமான விபத்து:

# விசாரணைக்கு சீனாவை அழைக்கிறது இலங்கை!

திருகோணமலை, டிசெ.18

திருகோணமலை, கந்தளாய் சூரியபுர பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை விபத்துக்குள்ளான பி.ரி. 6 ரக விமானத்தின் விசாரணைகளுக்கு சீனாவை நாடவுள்ளோம் என இலங்கை விமானப்படையின் ஊடகப் பேச்சாளர் துசாந்த விஜேசிங்க தெரிவித்தார்.

இந்த விமானம் சீனாவைச் சேர்ந்த சைனா நெசனல் ஏரோ என்கின்ற விமான உற்பத்தி நிறுவனத்திடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டது என்றும், அந்தவகையில் அந்த நிறுவனப் பிரதிநிதிகளை இலங்கைக்கு அழைத்து வருவது குறித்து பேச்சு நடத்தப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

விமானப்படை சார்பாக சீனாவின் உதவியை நாடநினைக்கவில்லை. இருந்த போதிலும், இது குறித்த விசாரணைக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் சிபாரிசுக்கு அமையவே இந்த முடிவை எடுத்துள்ளோம் - என்றார். (ந-22)

## பிட்டரத்மலை தோட்டத்தில் இருவருக்குத் தொற்று

ஹப்புத்தளை, டிசெ.18

ஹப்புத்தளை பிட்டரத்மலை பெருந்தோட்டப் பிரிவில் இரு கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இவர்கள், கொழும்பு கொச்சிக்கடைப் பகுதிக்குச் சென்று, மீண்டும் பிட்டரத்மலை பெருந்தோட்டப் பிரிவுக்குத் திரும்பியுள்ளனர். இந் நிலையில் இவ்விருவருக்கும் பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இவ்விருவரும் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு, நேற்று அனுப்பப்பட்டுள்ளனர். (ந)

# 30 உள்ளூராட்சி சபைகளில் தலா ரூபா 2 மில்லியனில் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், டிசெ.18

**வடக்கு மாகாணத்தில் உள்ள 30 உள்ளூராட்சி சபைகளில் தலா 2 மில்லியன் ரூபாவுக்கான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.**

மாகாண பிரதம செயலாளர், மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு பிரதியிட்டு உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தில் உள்ள மாநகர சபை, நகர சபைகள், பிரதேச சபைகளில் 30 சபைகள் தெரிவு செய்யப்பட்டு அடுத்த வருடம் தலா 2 மில்லியன் ரூபா மூலதனத் திட்டங்களுக்கு யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த உதவி உள்ளூராட்சி ஆணையாளர்களின். சிபாரிசுக்கமைய கடிதம் அனுப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபை , மன்னார் ,சாவகச்சேரி, பருத்தித்துறை , வல்வெட்டித்துறை ஆகிய நகரசபைகள், கரைதுறைப்பற்று, துணுக்காய், புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, நல்லூர், வலி.தெற்கு, வலி.வடக்கு, வலி. மேற்கு, காரைநகர், வலி.தெற்கு மேற்கு, வலி.கிழக்கு,வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, சாவகச்சேரி,வடமராட்சி தெற்கு மேற்கு, பருத்தித்துறை , வவுனியா வடக்கு,வவுனியா தெற்கு (சிங்கள) ஆகிய பிரதேச சபைகளும் அடங்கும்.

இவற்றுக்கு மேலதிகமாக வவுனியா நகரசபை, வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, பூநகரி பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி சபைகளும் இணைக்கப்பட்டுள்ளன. (ப-9)

## மானிய உரம் வழங்காது இழுத்தடிக்கும் அதிகாரிகள்

முள்ளியவளை, டிசெ.18

முள்ளியவளை தெற்கு கமக்கார அமைப்பின் கீழ் உள்ள காஞ்சிரமோட்டை குளத்தின் கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு இதுவரை அரசாங்கத்தின் மானிய உரம் கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

முள்ளியவளை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் முள்ளியவளை தெற்கு கமக்கார அமைப்பைக் கொண்ட காஞ்சிரமோட்டை குளத்தின் கீழ் 90.5 ஏக்கரில் காலபோக நெற்செய்கையை 25 விவசாயிகள் மேற்கொண்டுள்ளார்கள். நெல் விதைத்து இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை மானிய உரம் வழங்கப்படவில்லை. இதனால் நெற்பயிர்கள் அழிவடைந்து விளைச்சல் இல்லாத நிலை ஏற்படும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

மேலும், முள்ளியவளை கமக்கார அமைப்பின் கீழ் 5 குளங்கள் காணப்படுகின்றன. கூட்ட அறிக்கையின் படி பயிர்நிலங்களுக்கான வேலி இதுவரை கட்டப்படவில்லை. மற்ற நான்கு குளங்களுக்கும் பசளை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் காஞ்சிரமோட்டை குளத்தின் கீழ் உள்ள ஒரு விவசாயி தவிர்ந்த ஏனைய 24 விவசாயிகளுக்கு பசளை வழங்கப்படவில்லை என குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-19)

## லொஹான் ரத்வத்த பதவி விலக வேண்டும்!

*ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து*

கொழும்பு, டிசெ. 18

'மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பொய்யுரைத்த சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த பதவி விலகவேண்டும்' என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் மேற்படி நிலைப்பாட்டை அறிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மஹர சிறைச்சாலை மோதலில் கொல்லப்பட்ட கைதிகளில் நால்வர், துப்பாக்கிச் சூட்டில்தான் உயிரிழந்தனர் என விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை மேற்கோள்காட்டி ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆனால் துப்பாக்கிச்சூட்டில் எவரும் பலியாகவில்லை, கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலால்தான் உயிரிழப்புகள் ஏற்பட்டன என்று இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நாடாளுமன்றத்தில் அண்மையில் அறிவித்திருந்தார்.

விசாரணை முடிவடைவதற்கு முன்னரே, தவறாக தகவலை வெளியிட்டு நாடாளுமன்றத்தை தவறாக வழிநடத்துவதற்கு இராஜாங்க அமைச்சர் முற்பட்டுள்ளார். அமைச்சுக்கான உத்தியோகப்பூர்வ அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி மக்களுக்கும் போலியான தகவலை வழங்கியுள்ளார்.

எந்த அடிப்படையில் தான் தகவல் வெளியிட்டுள்ளார் என்பதை லொஹான் ரத்வத்த தெளிவுபடுத்த வேண்டும். அதேபோல அவர் பதவி விலகவும் வேண்டும். என்றார். (ம-44)

## மாகாணசபை முறையால் இலங்கை பிளவுபடாது!

### உடன் தேர்தலை நடத்துமாறு முன்னாள் முதல்வர் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 18

'மாகாணசபை முறைமைமூலம் நாடு ஒருபோதும் பிளவுபடாது. எனவே, உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்' என்று வடமத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் வலியுறுத்தினார். பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நல்லாட்சி அரசாங்கத்தின்போதுதான் சூழ்ச்சிமூலம் மாகாண சபைகளுக்கான தேர்தல் பிற்போடப்பட்டது. மக்களின் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டது. இதற்கான முழு பொறுப்பையும் கடந்த ஆட்சியாளர்கள்தான் ஏற்கவேண்டும்.

அதேபோல் மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்துவதற்காக மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதுதான் பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடாகும். தேர்தல் நடத்தப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்சவும், எமது கட்சியின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்சவும் அறிவித்துள்ளனர். மாகாணசபை முறையால் நாடு பிளவுபடவில்லை. இனி பிளவும்படாது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மறுசீரமைக்கப்பட்டால் மாற்றுவழி என்னவென்பது பற்றி எவரும் அறிவிக்கவில்லை. மாகாண சபை முறைமையை மக்கள் அனுமதித்துள்ளனர்.

எனவே, மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் வெற்றியளிக்க மாகாண சபை கட்டமைப்பு அவசியம்' என்றார். (ம-44)

## சீனாவுக்கான தூதராக கடமையேற்றார் பாலித



கொழும்பு, டிசெ.18

சீனாவுக்கான இலங்கையின் புதிய தூதராக நியமிக்கப்பட்ட பாலித கோஹன தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி சீனாவை சென்றடைந்த அவர் நேற்று முன்தினம் கடமைகளை பொறுப்பேற்றுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (வ-இ)

## அம்பாறையில் கொரோனா உச்சம்

### பல பகுதிகள் முடக்கம்

கொழும்பு, டிசெ. 18

அம்பாறை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் அம்மாவட்டத்தின் மேலும் பல பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.



இதன்படி, அக்கரைப்பற்று, அட்டாளச்சேனை, ஆலையடிவேம்பு ஆகிய பொலிஸ் அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் அக்கரைப்பற்று - 5, அக்கரைப்பற்று - 14 மற்றும் நகர் அதிகாரத்துக்குட்பட்ட - 3ஆம் பகுதி ஆகியன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டாளச்சேனை பொலிஸ் பிரிவில் பாலமுனை - 01, ஒலுவில் - 02 மற்றும் அட்டாளச்சேனை - 08 ஆகிய பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள் ளன.

இதேவேளை, மொனராகலை மாவட்டத்தின் அளுபொத்த கிராம உத்தியோகத்தர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் இராணுவத் தளபதி மேலும் கூறினார். (ம-22)

# நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்க இடமில்லை

## அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.18
பயங்கரவாதமும் தீவிரவாதமும் மீண்டும் தலைதூக்கினால் அவை அழிக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.
மேலும், நாட்டில் பலவீனமான நிலையில் காணப்பட்ட புலனாய்வுப் பிரிவு கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் வலுப்படுத்தப்பட்டுள்ளது.
புலனாய்வுப் பிரிவினர் சமீபத்தில் போதைப்பொருள் கடத்தல் முறியடிப்பு உள்ளிட்ட பல வெற்றிகரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.
நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்து மக்கள் அச்சம் இன்றி சுதந்திரமாக வாழும் நிலையை உறுதிசெய்யும் திறன் அரசாங்கத்திற்குள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (ந-இ)



# வாகன விபத்து: ஒருவர் உயிரிழப்பு

ஹற்றன், டிசெ.18
வட்டவளை பொலிஸ் பிரி வுக்குட்பட்ட வெலியா ஆக்ரோயா பகுதியில் அமைந்துள்ள தனியார் கல்குவாரி ஒன்றில் இடம்பெற்ற பெக்கோ இயந்திர விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்து கல்குவாரி வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது என வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர். அந்த நபர் பெக்கோ இயந்திரத்தை செலுத்துகையில் பெக்கோ அதன் கட்டுப்பாட்டை இழந்து 20 அடி பள்ளத்தில் குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியது. (வ-இ)

## புரேவியால் பாதித்தோருக்கு உலருணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், டிசெ.18
சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் ஏற்பாட்டில் கடந்த 5ம் திகதி புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர் துரைச்சுவாமி கருணாகடாட்சம் அவர்களின் மூன்றாவது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது குடும்பத்தினரால் புங்குடுதீவில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 120 குடும்பங்களுக்கு ரூபா 60 ஆயிரம் பெறுமதியான உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.
அத்துடன் மேற்படி குடும்பங்களுக்கு தீவகம் தெற்கு(வேலணை) பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலனின் 15 ஆயிரம் ரூபா நிதியுதவி ஊடாக அங்கர், தேயிலை, சீனி, நுளம்புத் திரி, மெழுகுதிரி போன்ற பொருள்கள் உள்ளிட்ட பொதியும் வழங்கப்பட்டது. (ந)



பதுளை கச்சேரி கேட்போர் கூடத்தில் நேற்று காலை பட்டதாரிகளுக்கான செயலமர்வு நடைபெற்றது. இலங்கை தேசிய சமாதான சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட இச் செயலமர்வில் பல தலைப்புக்களின் கீழ் விரிவுரைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந)

## ஊவா மாகாணத்தில் மேலதிக வகுப்பு ஆசிரியர்கள் உட்செல்ல, வெளியேறத் தடை

ஊவா, டிசெ.18
ஊவா மாகாணத்தில் மேலதிக வகுப்புகளை நடத்தவுள்ள ஆசிரியர்கள் மற்றும் நிறுவனங்கள் கொவிட்19 தடுப்பு நிலையத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டியது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது என ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முசாம்மில் தெரிவித்தார்.
மேலும், நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர வகுப்புக்களின் பரீட்சைக்கான மேலதிக வகுப்புக்கள் மட்டும், கொவிட்19 தாக்க சுகாதார வழி முறைகளுக்கமைய மேற்கொள்வதற்குத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
ஊவா மாகாணத்தில் மேலதிக வகுப்புக்களை நடத்தும், நடத்தவுள்ள ஆசிரியர்கள், வெளி மாகாணங்களுக்கு செல்லுதல் மற்றும் வெளி மாகாணங்களிலிருந்து மாகாணத்திற்குள் பிரவேசித்தல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன. இத் தடைகளை மீறு வோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ந)



மக்களால் மக்களுக்கு அமைப்பால் திருகோணமலை மூதூர் பாட்டாளிபுரம் பாமகள் பாடசாலையின் இவ் வருடம் சாதாரணதரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் 19 பேருக்கு 3 மாதங்களுக்கு மதிய உணவு வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் வைத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ந)



## இன்றைய நாள்

**மேடம்:** உத்யோகத்தர்கள் சக பணியாளர்களிடம் விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. கடின உழைப் பால் எதையும் சாதிக்க வேண்டிய சூழல் ஏற்படும். வாகனத்தில் பராமரிப்புச் செலவு ஏற்படலாம்.

**இடபம்:** மனப்போராட்டங்கள் ஓயும். மகளுக்கு திருமணம் கூடிவரும். திறமையான பேச்சால் தடைப்பட்ட வேலைகளை செய்து முடிப்பீர்கள். யாரோடும் கருத்து மோதல் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**மிதுனம்:** பேச்சிலும், பணியிலும் கவனத்துடன் செயல்பட வேண்டிய நாள். பிரச்னைகளைப் பேசி பெரி தாக்காமல் அமைதியாக இருப்பது நல்லது. காத்திருந்த பணம் கைக்கு வரும்.

**கடகம்:** பணி சம்பந்தமான விஷயங்களில் கவனமாக இருப்பது நல்லது. அதிகாரிகளின் சந்தேகப் பார்வை உங்கள் மீதிருந்து நகரும். வராது என்று நினைத்த பணத்தை வட்டியுடன் வசூலிப்பீர்கள். புது ஒப்பந்தம் கைக்கு வரும்.

**சிம்மம்:** பணிச்சுமை அதிகரிக்கும். பரிசுகளும் உண்டு. மனம் நிறையும். தற்போதைய வேலையையே சரியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு பெரிய நன்மைகள் காத்திருக்கின்றன.

**கன்னி:** உங்களின் திறமைக்கேற்ப பணியிடத்தில் பாராட்டுகள் குவியும். வேலை தேடுவோருக்கு நல்ல வாய்ப்புக்கள் கூடிவரும். பெண்கள் தங்கள் நிலைமையில் வளர்ச்சி காண்பார்கள்.

**துலாம்:** ஆசிரியர்களுக்கும், ஆன்மிகவாதிகளுக்கும் மதிப்பு உயரும். பணியிடத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். பாராட்டு கிடைக்கும். வீட்டில் அனுகூலமான போக்கு நிலவி வரும்.


**விருச்சிகம்:** வியாபாரத்தில் மறைமுக எதிரிகளால் இருந்து வந்த பிரச்சினை தீரும். கருத்து வேறுபாட்டால் பிரிந்து சென்றவர்கள் வந்து இணைவர். நல்ல வாய்ப்புக்கள் கிடைக்கும்.

**தனுசு:** வாகனம் வாங்க வங்கிக்கடன் கிடைக்கும். பேச்சில் கவனம் தேவை. சுபச்செலவுகள் அதிகரிக்கும். நெருங்கிய நண் பர்களுடன் சிறிய மனக்கசப்பு ஏற்படக்கூடும்.

**மகரம்:** பயம் வேண்டாம். முயற்சிகளில் தடைகள் உண்டாகலாம். புத்திசாலித் தனம் பளிச்சிடும். பலருடைய பாராட்டைப் பெறுவீர்கள். பெண்களால் நலம் உண்டாகும்.

**கும்பம்:** உடல்நலத்தில் கவனம் தேவை. தந்தையின் உதவி கிடைக்கும். பயணத்தின் மூலம் உங்களின் முக்கியமான விருப்பம் நிறைவேறும்.

**மீனம்:** புதிய பொருள்கள் அல்லது நகைகளின் சேர்க்கை நிகழும். குடும்பத்தில் சந்தோஷம் நீடிக்கும். நட்பு நன்மை தரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள்.




# சில நிமிட இன்பம் வாழ்நாளையே கருக்கிவிடும்!

யாழ்ப்பாணத்தில் 56
வவுனியா 28

வடக்கு மாகாணத்தில் இதுவரை 125 எச்.ஐ.வி. தொற்றாளர்

■ விஷ்ணு

உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மகிழ்ச்சியில் திழைத்திருக்கும் மனித மனங்கள் சின்னச் சின்ன விடயங்களையும் சந்தோசமானதாக்கிப் பார்க்கவே விரும்பும். அதேவேளை, உணர்வுகளை இன்பமாக வைத்திருக்கக்கூடிய சில இன்பங்கள் உபத்திரவங்களை ஏற்படுத்தி வாழ்நாள் முழுவதும் சிக்கலை ஏற்படுத்தி விடுவதுண்டு.

அவ்வாறான நிலையைத்தான் வடக்கில் ஏற்படுத்தியிருக்கின்றது எச்.ஐ.வி. தொற்று எயிட்ஸ் நோய்.

வடக்கில் குறிப்பாக வவுனியாவில், ஓரினச் சேர்க்கையால் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றன என்றும் இந்த விடயத்தில் இளைஞர்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்திருக்கின்றது, மாவட்ட பாலியல் நோய்த்தடுப்பு சிகிச்சை பிரிவு.

எச்.ஐ.வி. தொற்று அல்லது அதன் வீரியமான நிலையான எயிட்ஸ் நோய் பற்றி பல வருடங்களாகக் கூறப்பட்டு விழிப்புணர்வுகளும் நடத்தப்படுகின்றன. எனினும், அதன் தாற்பரியத்தை இளையோர்கள் எந்தளவுக்கு உள்வாங்கிக்கொண்டுள்ளனர்? அல்லது உள்வாங்கிக்கொண்டும் அதை அசிரத்தையாகக் கருதிவிட்டுச் செயற்படுகின்றனரா? என்று ஆராய வைத்திருக்கின்றன தரவுகள். இளையோரிடம் அந்தரங்கமானதாக இருந்து விரிவடைந்து அவர்களை சின்னாபின்னப்படுத்திவிடுகின்றது எயிட்ஸ்.

### வடக்கில் 125 பேர்

வடக்கு உட்பட நாடு முழுவதும் எச்.ஐ.வி. தொற்றாளர்கள் சுமார் 4 ஆயிரம் பேர் உள்ளனர். இலங்கை முழுவதும் கடந்தவருடம் 439 புதிய எச்.ஐ.வி. தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 15 வயது தொடக்கம் 24 வயதுக்கு உட்பட்ட இளைஞர் யுவ திகளே மிக அதிகளவாக 54 பேர். வடக்கு மாகாணத்தில் இதுவரை 125 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் எயிட்ஸ் நோயாளர்களாக தற்போது வரை 56 பேர் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். 10 பேர் நோய் காரணமாக உயிரிழந்துள்ளனர். வடக்கில் வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களையும் சேர்ந்தவர்களுக்குரிய சிகிச்சை நிலையமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உள்ள சிகிச்சைப் பிரிவு உள்ளது. தற்போது எயிட்ஸ் நோயாளர்களாக 20 வயதிலிருந்து சுமார் 65 வயது வரையானோர் உள்ளனர். இவர்களில் 30 தொடக்கம் 40 வயதுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கையே அதிகமாகவுள்ளது. இந்த வயதுப் பிரிவில் ஆண்களும் பெண்களும் கிட்டத்தட்ட சமமாகவே உள்ளனர் என்கின்றன தரவுகள். மன்னாரில் 9 பேர் உள்ளனர்.

### பெருகும் எச்.ஐ.வி.

வவுனியா மாவட்டத்தில் 2003 தொடக்கம் இன்றுவரை 28 எயிட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டிருக்கிறார்கள். அதில் 17 நோயாளிகள் இறந்திருக்கிறார்கள். 11 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் ஆறு ஆண்களும் ஐந்து பெண்களும் காணப்படுகின்றனர்.

கடந்த வருடம் 5 பேரும் இந்த வருடம் இதுவரை 5 பேரும் எச்.ஐ.வி. தொற்றாளர்களாக யாழ்ப்பாணத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். இளையோருக்கிடையிலான பாலியல் உறவு மூலமாகவும் தொற்றுடைய தாயிலிருந்து குழந்தை பிறப்பு மூலமாகப் பிள்ளைகளுக்கும் எச்.ஐ.வி. தொற்று பரவும். இந்த இரண்டு வகைகளைவிடவும் வேறு வழிமுறைகளிலும் இந்த வைரஸ் பரவுகின்றது.

### போதைப்பொருள் பாவனை

போதைப்பொருள் பாவனையுடையோர் ஊசிகள் (சிறிஞ்) மூலமாக போதை மருந்தை உடலுக்குள் செலுத்தும்போது ஒரே ஊசி மூலமாக ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்றப்படுவதனாலும் தொற்றுள்ளவரிடமிருந்து பலருக்கும் பரவிவிடுகின்றது. எனவே, போதைப் பாவனையுடையோர், தாங்கள் உடலுறவில் ஈடுபடுவதில்லை என்று கருதி எச்.ஐ.வி. தொற்று வரவேமாட்டாது என்று கூறிக்கொண்டு இருந்துவிடமுடியாது. வெளிநாடுகளிலிருந்து வருபவர்களிடமும் இந்த வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் இங்கு வந்த பின்னர்தான் அது தெரியவருகின்றது. சிலர் தொற்றுக்கு தத்தம் நாடுகளில் சிகிச்சை பெற்று இங்கு வந்தும் சிகிச்சையைத் தொடர்கின்றனர். எச்.ஐ.வி. தொற்று உள்ளதா இல்லையா என்பது குருதிப் பரிசோதனை மூலமாகவே கண்டறியப்படுகின்றது. தொற்று ஏற்பட்டுவிட்டால் வாழ்நாளையே தொலைத்தமைக்கு சமமாகிவிடும். எனவே உங்கள் செயற்பாடுகள் மூலமாக உங்களுக்கும் வைரஸ் பரவ அனுமதித்துவிடக்கூடாது. அதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

### மெல்லக்கொல்லும் மனச்சாட்சி

தொற்று ஏற்பட்டால், மற்றவர்கள் மத்தியில் உங்களை நீங்களே தரம்தாழ்த்திக் கொள்ளும் மனநிலை ஏற்பட்டுவிடும். திருமணத்தை நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத நிலைமை ஏற்படும். பொய்கூறி திருமணம் செய்யவும் உங்கள் மனச்சாட்சி இடமளிக்காது. பிறரிடம் கூறவும் முடியாத நிலையில் துடிதுடித்துப்போகும் நிலைதான் ஏற்படும்.

### தயங்காது பரிசோதியுங்கள்

ஏதோ ஒரு வகையில் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகிவிட்டால் அதற்குரிய சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிப்பவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 33ஆம் இலக்க அறையில் அல்லது வவுனியா மருத்துவமனையில் தங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தி தத்தம் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட ஏதாவது வழிமுறைகளில் தெரிந்தோ தெரியாமலோ தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று கருதினால்கூட உங்களை நீங்கள் பரிசோதனைசெய்து சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று போதனா மருத்துவமனையின் பாலியல் தொற்றுத் தடுப்புப் பிரிவு அறிவுறுத்துகின்றது.

சந்தேகத்துடன் வாழ்நாளைக் கழிப்பதைவிட பரிசோதனைசெய்து சநதேகத்தைப் போக்கிவிட்டு வாழ்க்கையை வாழத்தெரிந்து கொள்ளல் வேண்டும். ஒருவேளை தொற்று உள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டால் அதற்குரிய சிகிச்சையை உடனேயே ஆரம்பித்து விடுங்கள்.

நாடு முழுவதும் கர்ப்பிணிகள், கர்ப்பம் தரித்த 8ஆவது வாரத்தில் இந்தப் பரிசோதனை செய்யவேண்டும் என்ற நடைமுறை உள்ளது. இது வரவேற்கக்கூடியதே. இந்த வருடம் ஐந்து கர்ப்பிணிகள் எச்.ஐ.வி. தொற்றுள்ளவர்களாக இனங்காணப்பட்டிருந்தனர். அதற்குரிய சிகிச்சைகளைப் பெற்று அதன்பின்னர் அவர்கள் பெற்றெடுத்த குழந்தைகளுக்கு எச்.ஐ.வி. தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

தொற்று உள்ளமை கண்டறியப்பட்ட தினத்திலிருந்தே சிகிச்சை பெற்றுக் கொள்வதன் மூலமாக எயிட்ஸிலிருந்து விடுபடலாம் என்பதற்கு நல்லதோர் உதாரணம், மேற்குறிப்பிட்ட ஐந்து கர்ப்பிணிகள்.

### கைவிட்டால் தப்பமாட்டீர்

ஆரம்பத்திலேயே தொற்றை இனங்கண்டும் சிகிச்சை பெறாது விட்டாலே அல்லது சிகிச்சை பெற்று இடையில் கைவிட்டாலோ வைரஸ் தொற்று உடலில் மீண்டும் அதிகரித்து உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை இல்லாமல் செய்துவிடும். அவ்வாறு செய்தால் அதன்பின்னர் கண்டகண்ட நோயெல்லாம் ஏற்பட்டு சமாளிக்கமுடியாத நிலைமை ஏற்படும். விரைவிலேயே இறப்பு ஏற்பட்டுவிடும். இறப்பை புறமொதுக்கிவிட்டு ஏனைய மக்கள் போல் வாழவேண்டும் என்றால் சிகிச்சை பெற்றுத்தான் ஆகவேண்டும். ஆரம்பத்திலேயே சிகிச்சை பெறத்தொடங்கிவிட்டால் எச்.ஐ.வி. வைரஸ் செயலிழந்த நிலையில் இருக்கும். எத்தனை வயது வரைக்குமென்றாலும், உயிர்வாழ முடியும். சிகிச்சையை மாதாந்தம் பெற்றுவருபவர்களுக்கு தொற்று உள்ளது என்பதை அவர்களின் புறத்தோற்றத்தைப் பார்த்து எவருமே கண்டுபிடித்துவிடமுடியாது.

சிகிச்சை பெறாதுவிட்டால் அல்லது சிகிச்சையை இடைநிறுத்தினால், அதுவரை எச்.ஐ.வி. வைரஸ் தொற்றாக இருந்த வைரஸ் பெருகி எயிட்ஸ் நோயாகிவிடும். நோய் நிலைக்குச் சென்றுவிட்டால் மாற்றமுடியாது. இலங்கையிலிருந்து எயிட்ஸ் தொற்றை இல்லாமல் செய்வதற்கு இலங்கையில் உள்ள அனைவருமே ஒரு தடவை எச்.ஐ.வி. பரிசோதனை செய்யவேண்டும் என்பதே தங்கள் ஆலோசனை என்று பாலியல் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு கூறுகின்றது.

### திருமணம் செய்யலாம்

தொடர் சிகிச்சை மூலமாக எச்.ஐ.வி. என்ற வைரஸ்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டால், திருமணம்கூட செய்யலாம். வைரஸ்களின் எண்ணிக்கையைக் குறைத்த நிலையில் உடலுறவு கொள்வதன் மூலமாக உங்கள் வாழ்க்கைத் துணைக்கோ அல்லது பிறக்கும் குழந்தைக்கோ எச்.ஐ.வி. தொற்று வர வாய்ப்பே இல்லை என்று பாலியல் நோய்த் தடுப்பு சிகிச்சைப் பிரிவு கூறுகின்றது. வாழ்க்கைத் துணைக்கு புரிந்துணர்வு இருந்தால்போதும் எந்தச் சிக்கலும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

தொற்றாளர்கள் இதுபற்றி பாலியல் தடுப்பு நோய் சிகிச்சைப் பிரிவில் முறையிடும்போது உரிய அறிவுரைகள் வழங்கப்படும் என்று அந்தப் பிரிவு கூறுகின்றது.

### மாற்றுவழி உண்டு

எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டால் எவ்வாறு கொடுமையான நிலைமைகளை அனுபவிக்கவேண்டுமோ அதேயளவுக்கு மாற்று வழிகளும் உள்ளன என்பதை அந்தப் பிரிவு கூறுகின்றது. எனவே தொற்று வராதவாறு நடந்துகொள்ளுங்கள் வந்துவிட்டால் அந்த எண்ண சோர்வுக்குள் வீழ்ந்து கிடக்காது. மீண்டுவரும் வழிகளைக் கையாளுங்கள்.

# முஸ்லிம் இளைஞர்களை ஆயுதமேந்த வைக்காதீர்!

## ஜனாஸா எரிப்பு விவகாரம் குறித்து நீதி அமைச்சர் அலி சப்ரி எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 18

'கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்காவிட்டால் பெரும் பிரச்சினைகள் உருவெடுக்கும். அது முஸ்லிம் இளைஞர்களை ஆயுதமேந்தவும் வைத்துவிடலாம் இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை மாலைதீவில் புதைக்க முடியும் என்றால், அவற்றை ஏன் இலங்கையில் புதைக்க முடியாது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொரோனா ஜனாஸாக்களை அடக்கம் செய்வதன் ஊடாகத் தொற்று பரவாது என்பதை தொற்று நோய் மற்றும் வைரஸ் குறித்த பிரபல்யம் வாய்ந்த பேராசிரியர் மலித் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார் என்றும் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாஸா விவகாரத்தில் இலங்கை அரசுக்கு தற்போது கடும் எதிர்ப்பு தேசிய ரீதியில் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## தொ.நுட்ப. உத்தியோகத்தர் பரீட்சை ஞாயிறன்று

யாழ்ப்பாணம், டிசெ.18

சீரற்ற காலநிலை காரணமாக ஒத்திவைக் கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியினருக்கான 1ஆம், 2ஆம் திணைக்கள பரீட்சைகளுக்கான திணைக் கள ஒழுங்கு விதிகள் எழுத்துப் பரீட்சை வரும் ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகை மையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனு மதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக் கப்பெறாத விண்ணப்பதாரிகள் "செயலா ளர், மாகாண பொதுச்சேவை ஆணைக் குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடனோ அல்லது 021 2219939 என்னும் தொலைபேசி இலக் கத்துடனோ உடனடியாகத் தொடர்புகொள் ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப் படுவார்கள் எனவும், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலர் திருவாகரன் தெரிவித்துள்ளார். (ப-ரி4)

## மன்னாரில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விதைப்பொதி



தேசிய ரீதியில் முன்னெடுக்கப் பட்டு வரும் பத்து லட்சம் மனைப் பொருளாதார செயற்றிட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 2 ஆயிரம் பயனாளிகளுக்கான விதைப்பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் நகர பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் கலந்துகொண்டு முதல் கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட 50 பயனாளி களுக்கு விதைப்பொதிகளை வழங்கினார். (ம-56)



## படகுகளைப் பாதுகாப்பதற்காக சுப்பர் மடத்தில் அணைக்கட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 18

பருத்தித்துறை சுப்பர்மடம் மீனவர்களின் படகுகளை அலையில் இருந்து பாதுகாப்பாக வைத்திருக்க அணைக்கட்டு சீரமைக்கப்பட்டு வருகின்றது.

தொடர்ச்சியாக ஏற்பட்ட அலையின் தாக்கம் மற்றும் புரேவி புயல் காரணமாக ஏராளமான படகுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. இதையடுத்து குறித்த இடத்தில் ஓர் அணைக்கட்டு அமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த நிலையில் புலம்பெயர் தேசத்து ஆதரவாளர் ஒருவரின் நிதியுதவியில் அங்கு அணைக்கட்டு அமைக்கப்படவுள்ளது. இந்த அணைக்கட்டுக்கான கட்டுமானப் பணிகளுக்கான அடிக்கல் தமிழ்த்தேசிய இளையோர் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி மணிவண்ணனால் நடப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டன. (ம-26)

## மர்மச் சத்தத்தால் மக்கள் குழப்பம்

கண்டி, டிசெ.18

கண்டி திகனையில் நேற்றுப் பகல் 1.05 மணியளவில் மர்மச்சத்தம் ஒன்று கேட் டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. திகனையில் அடிக்கொரு தடவை நில நடுக்கம் ஏற்படுவதால், மீண்டுமொரு தடவை நிலம் நடுங்குவதற்கு முன்னர் அந்தச் சத்தம் கேட்டுள்ளதா என்று மக்கள் அச்சமடைந்தனர். எனினும், படைப்பிரிவின் பயிற்சி நடவடிக்கை யும் அப் பிரதேசத்தில் தற்போது முன் னெடுக்கப்படுகின்றன என படைத்த ரப்பு தகவல்கள் தெரிவித்தன. அந்தப் பயிற்சியின் போது சில வெடிபொருள் கள் வெடிக்கப்பட்டன எனவும் தகவல் கள் தெரிவிக்கின்றன. எனினும், அவ்வாறான தகவல்களை உறுதி ப்படுத்த முடியவில்லை. (ப)

## மழையுடனான காலநிலையால் திராட்சை செய்கை பாதிப்பு



யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ்ப்பாணத்தில் நிலவும் மழையுடன் கூடிய கால நிலையால் திராட்சை செய்கை கடுமையாக பாதிக் கப்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரி வித்துள்ளனர்.

புரேவி புயல் மற்றும் மழையுடன் கூடிய கால நிலை யாழ்ப்பாணத்தில் நிலவியதை அடுத்து அறுவடைக்குத் தயாராக இருந்த திராட்சை பழங் கள் அழுகியும் ,பழத்தின் தன்மை மாறியுமுள் ளன. இதனால் திராட்சை செய்கை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

பல லட்சம் ரூபா பெறுமதியான திராட்சை பழங் கள் அழுகி, விற்பனை செய்ய முடியாது காணப் படுகின்றன.

யாழ்ப்பாணத்தின் புன்னாலைக்கட்டுவன், உரும் பிராய், ஊரெழு ஆகிய பகுதிகளில் அதிகளவான திராட்சை செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## ஜனாஸா எரிப்புக்கு எதிராக நிந்தவூரில் போர்க்கொடி

### கபன் சீலை கட்டி கண்டனம்

அம்பாறை, டிசெ. 18

கொரோனா வைரஸ் தாக்கத்தால் இறந்ததாகக் கூறி இருபது நாள்க ளேயான பச்சிளம் குழந்தையை எரித்தமைக்கு பலத்த கண்டனம் தெரிவித்தும், அதே கொரோனா வால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதை நிறுத் தக் கோரியும் அம்பாறை மாவட் டத்தின் முக்கிய முஸ்லிம் பிரதேச மான நிந்தவூரில் நேற்றுமுந்தி னம் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட் டது.

நிந்தவூர் பிரதேச சபையின் முஸ் லிம், தமிழ் உறுப்பினர்கள் 'கபன் சீலை' கட்டி (வெள்ளைத் துணி)



அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான இந்த போராட்டத்தை

நேற்று முந்தினம் முன்னெடுத்தனர். தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் பிரதி தவிசாளர் வை.எல்.சுலைமா லெவ்வை மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கட்சி பேதமின்றித் திரண்டு பிரதேச சபை நுழைவா யில் கபன் துணி களை க்கட்டி எதிர்ப்பை வெளி யிட்டனர். (ம-30)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:07.07.1929 மறைவு:17.12.2020

எமது கல்லூரியின் முன்னாள் கணித ஆசிரியரும் முன்னாள் அதிபரும், எமது கல்லூரியின் முன்னாள் கணித ஆசிரியராக பணியாற்றி ஓய்வுபெற்ற திரு.ந. சிவகுமார் அவர்களின் அன்பு தந்தையாருமாகிய

**அமரர் கார்த்திகேசு நடராசா**

(ஓய்வுநிலை அதிபர்)

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு பெருந்துயர் அடைந்தோம். அமரரின் ஆத்மா அமைதிபெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள்**
**யா/யாழ்ற்ரன் கல்லூரி - காரைநகர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16 . 12 . 1942

மறைவு 30 . 12 . 2019

**அமரர் செல்லம்மா பரராஜசிங்கம்**

(களபூமி காரைநகர், ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)

**திதி: சதுர்த்தி**

மீளாத் துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன் ஓர் ஆண்டென்ன
ஓராயிரம் ஆண்டுகள் உருண்டோடினாலும்
மறவோம் உன்னை எந்நாளும்...

ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி !!!

குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி நிரஞ்சலா ஜெகசோதி**

தோற்றம் 04.11.1970 — மறைவு 18.12.2016

அன்பின் திருவுருவே!
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டு நான்கல்ல ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடை பெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள்
என்றென்றும் நம்மை விட்டு நீங்காது

இல.40, சுவர்ணா வீதி,
கொழும்பு - 06.

குடும்பத்தினர்


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி- 45ரூபாய்

தொடர்புகளுக்கு- 0773341281

## விற்பனையாளர் தேவை

பிரபல கம்பனி ஒன்றின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்குரிய விற்பனையாளர் தேவை.

இடம் - I. முல்லைத்தீவு மாவட்டம்
II. கிளிநொச்சி மாவட்டம்

மேலதிக தொடர்புகளுக்கு-
தொலைபேசி இல:
076 990 3620, 076 990 3611

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1970.05.09 பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை. இவர் சுவிஸ் நாட்டில் தொழில் அதிபராக இருக்கிறார்.
எதிர்பார்ப்பு லோயர்/ பட்டதாரி
பிறப்பிடம் - மிருசுவில்

077 914 9436


## கேள்வி அறிவித்தல் திருத்தம்

(COU/VU/VNPS/W/10/2020)

2020.12.17ஆம் திகதிய கேள்வி அறிவித்தலில் வேண்டப்படும் தரம் C8 or C9 என கோரப்பட்டது, தற்போது C7 or C8 ஆக மாற்றம் செய்யப்படுகின்றது.

தலைவர்,
பெறுகைக்குழு,
வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி.


## வேலையாள்கள் தேவை


பரந்தனில் இயங்கிவரும் கபிசாந் டீசல் எஞ்சினியரிங் நிறுவனத்திற்கு முன்னனுபவமுள்ள பெயின்ரிங் (வாகனத் துக்கு வர்ணம் பூசுதல்) மற்றும் ரிங்கரிங் தெரிந்த வேலையாள்கள் தேவை. தகுதியின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். வெளி மாவட்டத்தவர்கள் அல்லது தூர இடத்தில் இருப்பவர்களுக்கு தங்குமிடம் வழங்கப்படும்.

077 693 9312, 077 328 3592
160 ஆம் கட்டை, A9வீதி, பரந்தன்


# மரண அறிவித்தல்

## வேதவனம் குமாரசாமி

(ஓய்வுபெற்ற நீதிமன்ற உத்தியோகத்தர் - சாவகச்சேரி, பருத்தித்துறை)



ஐயனார் வீதி, கல்வயல். சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேதவனம் குமாரசாமி 16.12.2020 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதவனம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பு - பாக்கியம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பூபதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற முருகேசு, ஆறுமுகம், பொன்னையா, இரத்தினம், மாணிக்கம், மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் மைத்துனரும், இளங்கோ (முன்னாள் வடமாகாணப் பணிப்பாளர் சேவாலங்கா), மகேந்திரன் (தலைவர் N - GACDO, வவுனியா), சிவஞான சுந்தரம் (றூபா பன்முகவர்த்தகம்), கணேசமூர்த்தி, காலஞ்சென்ற பஞ்சகல்யாணி மற்றும் நித்யகல்யாணி (கணக்காளர் - அமெரிக்கா), மங்களகல்யாணி (விரிவுரை யாளர் - கல்வியியற் கல்லூரி - பொலநறுவை) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிர்மலா, கமலவேணி, மோகனலதா, சசிமுகுந்தன் (மருந்துவதாதி - அமெரிக்கா), சிவநேசன் (யாழ் - மாநகரசபை) ஆகியோரின் மாமனும், அர்ஜினா (பிரான்ஸ்), அகல்யா (கணக்காளர் - கொழும்பு), கஸ்தூரி, சுமன் (விவசாய போதனா ஆசிரியர் - வவுனியா), சுயேன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), காயத்திரி, மாதுரி (மேர்ச்சன்ட் வங்கி), பிரணவன் (உயர் தேசிய கணக்கியல் டிப்பேளாமா - மாணவன்), அர்ச்சனா, அஜய் (அமெரிக்கா), அஞ்சலி (அமெரிக்கா), யானவி, மகேந்திரராஜ் (LOLC பிராந்திய முகாமையாளர்), நிருபன், ஹேமசிந்துஜா (உதவிச் செயலாளர் - வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு), நவநீதன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - மன்னார்) ஆகியோரின் பேரனும், பிரனீத், நவநீத், யுத்திகா, அஸ்விகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்மகிழ 08.01.1927

மண்நெகிழ 16.12.2020

பூபதி
ஐயனார் வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்

| | |
|---|---|
| இளங்கோ | - 077 774 8511 |
| மகேந்திரன் | - 071 235 9534 |
| மங்களகல்யாணி | - 077 454 3223 |
| சிவஞானசுந்தரம் | - 077 345 3299 |

# துப்பாக்கி சூட்டிலேயே கைதிகள் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.18
மஹர சிறைச்சாலை கலவரத்தின் போது உயிரந்த 11 கைதிகளில் நால்வரின்பிரேத பரிசோதனையில் அறிக்கை வெளியாகியுள்ளது. அதில் அவர்கள் துப்பாக்கிச் சூட்டிலேயே உயிரிழந்துள்ளனர் என தெரியவந்துள்ளது.

அவர்களின் பிரேத பரிசோதனை அறிக்கை நேற்று வத்தளை நீதிவான் புத்திக ஸ்ரீ ராகலவுக்கு இரகசியமாக சிறப்பு நிபுணர் குழுவால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த விடயத்தை நீதவான் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நான்கு கைதிகளின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதி கோரி அவர்களது உறவினர்கள் விடுத்த கோரிக்கையை நிராகரித்த நீதவான் உடல்களை உடனடியாக தகனம் செய்யுமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு உத்தரவிட்டார். வழக்கின் மேலதிக விசாரணை 18 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (வ-இ)

தொடர்புபட்ட செய்தி 10ஆம் பக்கத்தில்

## கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.18
தொழில்நுட்பவியல் கல்லூரியின் புதிய கல்வி ஆண்டுக்கான சான்றிதழ் தர மற்றும் டிப்ளோமாதர கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கற்கை நெறியை பயில விரும்பும் தகுதியுடையோர் பணிப்பாளர் தொழில்நுட்பவியல் கல்லூரி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். சான்றிதழ் தர கற்கை நெறிகளுக்கு எதிர்வரும் 30 ஆம் திகதியும், டிப்ளோமா தர கற்கை நெறிகளுக்கு ஜனவரி 29 ஆம் திகதியும் விண்ணப்ப முடிவு திகதி களாகும். மேலதிக விவரங்களைப் பெற dtet.gov.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


## நினைவஞ்சலி

இருபத்தைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி | முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




**சின்னையா ஆறுமுகம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
தோற்றம் 29.03.1934 மறைவு 19.04.1995

அன்பும் பாசமும் ஊட்டி
அரவணைத்த அப்பா மறைந்த
இருபத்தைந்தாம் ஆண்டுதனில்
நினைவு கூருகின்றோம்.

வாகையடி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**ஆறுமுகம் அன்னம்மா**
தோற்றம் 27.04.1943 மறைவு 29.12.2019
திதி: பூர்வபக்க சதுர்த்தி

வருடம் ஒன்று ஆனதுவே
வாழவைத்த தெய்வம்
- எமைப் பிரிந்து
ஆண்டவன் அடியில் இருந்து
ஆசீர்வதிப்பீர் என்றும் எம்மை

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில் 1929 . 07 . 07



மண்ணின் மடியில் 2020 . 12 . 17

**அமரர் திரு.கார்த்திகேசு நடராசா**
( ஓய்வுநிலை அதிபர்)

அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய திருப்பணித் தொண்டர்
திரு. கார்த்திகேசு நடராசா (K.K.நடராசா) அவர்களின் மறவையொட்டி

எமது ஊர்மக்கள் இடம் பெயர்ந்து சென்று திரும்பி ஊருக்கு வந்த 1996ம் ஆண்டு எமது ஆலயம் திரும்பவும் புனருத்தாரணம் செய்ய வேண்டும் எனும் எண்ணத்துடன் திருப்பணிகளை ஆரம்பித்தவர் திருவாளர் நடராசா அவர்கள். அன்று முதல் இன்று வரை ஆலயத்திருப்பணிக்கு தம்மை அர்ப்பணித்தவர். இவரது காலத்தில் விநாயகர் ஆலயம், சண்டேசுவரர் ஆலயம், இராச கோபுர மணி மண்டபம், என்பன கட்டப்பட்டதுடன் சப்பரம், தேர் திருப்பணிகளும் இடம் பெற்றது. மேலும் இரண்டு நேர பூஜையுடன் மகோற்சவம் ஏனைய உற்சவங்கள் நடாத்தப்பட்டு ஆலய வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றியவரும் தேர் திருவிழா உபயகாரராகவும் விளங்கியவர். அன்னாரின் மறைவு எமக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். பயிரிக்கூடல் முருகன் சேவடிகளில் அவரது ஆத்மா சாந்தியடைய முருகப்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி ! சாந்தி ! சாந்தி!

ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி
தேவஸ்தானம் பயிரிக்கூடல்
காரைநகர்.

பிரிவால் துயருறும்
ஆலய பிரதம குரு
சிவஸ்ரீ.கு.சண்முகராஜா குருக்களும்
திருவிழா அனைத்து உபயகாரர்களும்


### முதலாம் பக்கத் தொடர்ச்சி....

**காணாமல்...**

தலைவியை நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.
நீதிமன்று வழங்கியுள்ள கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது
காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் இன்று 10 மணிக்கு வவுனியா அஞ்சல் அலுவலகத்துக்கு அருகில் விளம்பரப் பலகைகளைக் காட்சிக்கு வைத்து ஆர்ப்பாட்டம் செய்ய ஆயத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தால் தற்போது பரவி வரும் கொரோனாத் தொற்று மேலும் பரவுவதற்கும் மற்றும் மக்களின் சுகாதாரத்துக்குப் பாதிப்பு ஏற்படுவதற்கும் இடமுள்ளது. தனிமைப்படுத்தல் விதி முறை இல்லாமல் போகும் என்பதாலும் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்த இருக்கும் இந்த ஆர்பாட்ட குழுவின் தலைவியாகிய தேக்கவத்தை வவுனியா என்னும் விலாசத்தில் வசிக்கும் காசிப்பிள்ளை ஜெயவனிதா என்பவருக்கு குற்றவியல் நடவடிக்கை முறை சட்டகோவையின், சட்டம் 106 (1) பிரிவின் கீழ், இந்த ஆர்பாட்டத்தை நிறுத்த வேண்டும் என்று இத்தால் கட்டளையிடுகின்றேன் என்றுள்ளது.
(எ-ஜ-110)


## தவறிவிட்டது

அ.நகுலேஸ்வரன் ஆகியவருடைய அடையாள அட்டை மற்றும் வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய பணப்பை நாச்சிமார் கோவிலடிக்கும் ஸ்ரான்லி றோட் மற்றும் வீரமாகாளி கோவிலடிக்கும், இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையில் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்புடும்.

**077 625 8162, 077 887 9812**

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வரைவுள்ளது)
பதிவு எண். யா/1670 திகதி 1962.03.02
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

## அறிவித்தல் கேள்வி கோரல்

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வது) 637, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (பன்றிக்கோட்டு பிள்ளையார் கோயில் அருகில்) எனும் முகவரியில் அமைந்துள்ள அடித்தளம் மற்றும் 1 ஆம் மாடி கொண்ட சகல வசதிகளுடனான கட்டடம் வாடகைக்கு விடப்பட உள்ளது. இக்கட்டடத்தை பார்வையிடுவதற்கு அலுவலக கடமை நேரம் காலை 8.30 - 4.00 மணி வரையும் சனிக்கிழமை காலை 8.30 - 1.30 மணி வரையும் 826 / 12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (உப்புக்கடை ஒழுங்கை தட்டாதெரு) எனும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் அல்லது தொலைபேசி இலக்கம் 021 222 3131 இன் ஊடாக தொடர்பு கொண்டு மேற்படி கட்டடத்தை பார்வை இட்டு உடன் வைப்பு பணம் மற்றும் மாதவாடகைப் பணம் என்பவற்றை குறிப்பிட்டு 26.12.2020 ஆந் திகதிக்கு முன்னர் கேள்விப்பத்திரத்தை நேரில் அல்லது தபால் மூலம் அனுப்பிவைத்தல்வேண்டும்.

தலைவர்.

## தேவை

திருநெல்வேலி பிரதேசத்துக்கு உட்பட்ட நிறுவ்னம் ஒன்றிற்கு
**கணக்காளர் (உதவியாளர்)** தேவை.
**(பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)**

**தகைமைகள்:**

**கணக்காளர் (உதவியாளர்)**

- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்
- ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருக்கவேண்டும்
- முன் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்
- கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்
- வயதெல்லை 21 - 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல்வேண்டும்

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிபரக்கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோபிரதி ஆகியவற்றை இணைத்து **25.12.2020** இற்கு முன்னதாக **கீழ் குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.**

மின்னஞ்சல் முகவரி: jobdocumentsbsa@yahoo.com

# உயர் பதவிகளில் பெண்கள்: அதிகாரிகளுக்கு அபராதம்!



பாரிஸ், டிசெ.18

**2018ஆம் ஆண்டு உயர் பதவிகளில் அதிகமான பெண்களைப் பணிக்கு அமர்த்தி பாரிஸில் பாலினச் சமத்துவத்தை மீறினார்கள் எனத் தெரிவித்து பாரிஸ் நகர அதிகாரிகளுக்கு சுமார் 90 ஆயிரம் யூரோ அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.**

அந்தக் காலப்பகுதியில் உயர் பதவிகளில் 69 வீதமான பெண்கள் பணிபுரிந்துள்ளனர். அதனால் பிரான்ஸ் பொதுச்சேவை அமைச்சு பாரிஸ் நகர அதிகாரிகளுக்கு இந்த அபராதத்தை விதித்துள்ளது.

அமைச்சின் அந்த முடிவுக்கு பதிலளித்த பாரிஸ் நகர முதல்வர் அன் ஹிடல்கோ, அபராதம் விதித்த செய்தியைக் கேட்டபோது, தமக்கு மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தது என்று வேடிக்கையாக பதிலளித்தது டன், இது மிகவும் ஆபத்தானது, நியாயம் இல்லாதது, பொறுப்பற்றது என்று கடுமையான கண்டனம் தெரிவித்தார்.

துணை முதல்வரோடும் தம்மோடு பணிபுரியும் அனைத்துப் பெண்களோடும் நேரில் சென்று, அரசாங்கத்திடம் அபராதத்துக்கான காசோலையை வழங்குவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் நிர்வாகப் பதவிகளில், ஒரு பாலினத்தைச் சேர்ந்தவர்கள் 60 வீதத்துக்கு மேல் இருக்கக்கூடாது என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)



## ருவிற்றர் கில்லருக்கு தூக்குத் தண்டனை!

டோக்கியோ, டிசெ.18

ஜப்பானில் தற்கொலை எண்ணம் கொண்டவர்களிடம் சமூக வலைதளத்தில் நட்புடன் பழகி, கொலை செய்த நபருக்கு தூக்கு தண்டனை விதித்து டோக்கியோ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ருவிட்டரில் 'ருவிட்டர் கில்லர்' என்ற பெயரில் தகாஹிரோ ஷிரைஷி என்ற இளைஞர், தற்கொலை தொடர்பில் பதிவிடுபவர்களைத் தொடர்புகொண்டுள்ளார். அவர்களிடம் நட்புடன் பழகி அவர்களது தற்கொலை எண்ணத்தை நிறைவேற்றுவதாகக் கூறி அவர்களில் 9 பேரைக் கொலை செய்துள்ளார். ஜப்பானில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தில் குற்றவாளியான தகாஹிரோ 2017ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக நடந்த வழக்கில் தற்கொலை எண்ணம் கொண்டவர்களையே தான் கொலை செய்தேன் எனக் கூறிய அவரின் வாதத்தை முற்றாக நிராகரித்த டோக்கியோ நீதிமன்றம் குற்றவாளிக்குத் தூக்கு தண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்துள்ளது. (வ-இ)

## அமெரிக்காவில் பனிப்புயல்

நியூயோர்க், டிசெ. 18

அமெரிக்காவின் கிழக்கு கடற்கரை பகுதியைத் தாக்கிய பனிப்புயலால் பல மாநிலங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த புயல் கொலராடோவிலிருந்து மைனே மாநிலம் வரை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 14 மாநிலங்களுக்கு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளது. சில பகுதிகளில் கடந்த குளிர் காலத்தில் பார்த்ததை விட அதிக பனி பொழியும் சாத்தியம் உள்ளது என தேசிய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

பனிப்பொழிவால் இருவர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காய மடைந்துள்ளனர். (ம-வஇ)



## பூமி திரும்பியது சீன விண்கலம்

பீஜிங், டிசெ, 18

நிலவிலிருந்து கற்கள், பாறைகளை சேகரித்துக்கொண்டு சீனாவின் சேஞ்ச்5 என்ற விண்கலம் பூமி திரும்பியது.

கடந்த மாதம் 24ஆம் திகதி இந்த விண்கலத்தை சீனா ஆய்வுக்காக அனுப்பியது.

கடந்த முதலாம் திகதி நிலவில் பத்திரமாக தரை இறங்கிய அது திட்டமிட்டபடி கற்கள், பாறைகள் போன்றவற்றை சேகரித்தது.

கடந்த 14ஆம் திகதி பூமியை நோக்கி திரும்பிய விண்கலம் இன்று அதிகாலை 1.30 மணியளவில் சீனாவில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

நிலவில் இருந்து பாறை மற்றும் மணல் துகள்களை கொண்டுவந்த 3ஆவது நாடு என்ற பெருமையை சீனா பெற்றுள்ளது. (ம-வஇ)



## ட்ரம்ப் வெளியேறுவது எமக்கு மிக மகிழ்ச்சி

*ஈரான் ஜனாதிபதி தெரிவிப்பு*

தெஹ்ரான், டிசெ. 18

ட்ரம்ப் வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறுவது மகிழ்ச்சியாக உள்ளது என்று ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவ்ஹானி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரச தொலைக்காட்சியில் உரையாற்றிய ஹசன் ரவ்ஹானி, ஜோ பைடன் பதவியேற்பது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. ஆனால் டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறுவது எங்களுக்கு மகிழ்ச்சியாக உள்ளது. பல கொடுமைகளைச் செய்தவர் ட்ரம்ப். அவர் ஒரு கொலையாளி, பயங்கரவாதி. அவர் எங்கள் தடுப்பூசி முயற்சிகளைக்கூட தடுத்தார். ட்ரம்ப் தனது அனைத்து நெறிகளையும், கொள்கைகளையும் இழந்துவிட்டார் எனத் தெரிவித்தார். (ம-வஇ)





## தனிமையில் பொம்பியோ

வொஷிங்டன், டிசெ. 18

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பொம்பியோ தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். கொரோனாத் தொற்றுக்குள்ளானவருடன் நேரடித் தொடர்பில் அவர் இருந்தமை தெரியவந்ததையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அந்நாட்டு வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. இருப்பினும் பொம்பியோ யாருடன் நேரடித் தொடர்பில் இருந்து வந்தார் என்பதைக் குறிப்பிட அமைச்சு மறுத்துவிட்டது. (வ-இ)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி

**கிருபானந்தன்**
**பவிசனா**

**2020 ஆம் ஆண்டு நடைபெற்ற**
**தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில்**
**171 புள்ளிகளைப்**
பெற்று சித்தியடைந்துள்ளார்
இவரையும் தோற்றிய அனைத்து
மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு
மேல் பெற்றுள்ளனர் இவர்களையும்
கற்பித்த **ஆசிரியர், அதிபர்**
ஆகியோரையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாராட்டி வாழ்த்துவோர்:
**பாடசாலைச் சமூகம்**
**யா/ கைதடி குருசாமி**
**வித்தியாலயம்.**

# துணுக்காய் பிரதேசசபை
# பொது அறிவித்தல் - 2021

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் / தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன். இந்நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர்மீது 1987ம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தரு கின்றேன்

**01. வியாபார உரிம அனுமதிப் பத்திரம் - 2021**
சபை எல்லைக்குள் வியாபா நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் 2021ஆம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப் பத்திரத்தை 2021.03.31ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றேன்.

**02. சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL) -2021**
1533/16 ஆம் இலக்க 2008.01.25ஆம் திகதிய அரச வர்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் அல்லது ஏற்கனவே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றவர்கள் உரிமம் காலாவதித் திகதிக்கு மூன்று மாதத்திற்கு முன் விண்ணப்பித்து புதுப்பித்துக்கொள்ளுதல் வேண்டும்

**03. வீடமைப்பு நாடு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**
3:1 துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குள் புதிய கட்டடங்களை அமைத்தல், எல்லைச்சுவர் அமைத் தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலி அமைத்தல், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க் கிணறுகள் என்பவற்றை அமைத்தல், கட்டடங்களை விரிவாக்குதல், புதுப்பித்தல் என்பன பிரதேசச பையின் அனுமதியை பெற்று மேற்கொள்ளப்படல் வேண்டும். சபையின் அனுமதி பெறப் படாது அமைக் கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாயினும் அனுமதியற்ற கட்டடங்களாக கருதி சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும் அல்லது நட்டஈடின்றி அகற்றப்படும்
3:2 கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒருவருடத்திற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பாக காலநீடிப்பு அனுமதி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்
3:3 அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபைக்கு அறியத்தந்து உரிய கட்டட அமைவுச் சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்

**04. துவிச்சக்கர உரிமம், மிருகவரி உரிமம் பெற்றுக்கொள்ளல் -2021**
2021ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி, மிருகவரி உரிமங்களை 2021.03.31ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளல் வேண்டும்

**05. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**
சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் இருமருங்கிலும், வீதிக்கு மேலாகவும் அத்துடன் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களுக்கு பிரதேசசபை யில் கட்டணத்தைச் செலுத்தி சபையின் உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியை பெற்றுக்கொள்ளாத வர்த்தக நிலைய உரிமையாளர்கள் / நிறுவனங்கள்/ முகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றப்படும்

**06. முச்சக்கரவண்டி தரிப்பிடம்**
சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழங்குபவர்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் பிரதேசசபையில் உரிய கட்டணத்தை செலுத்தி பதிவினை மேற்கொள்ளல் வேண்டும்

**07. மரக்கறிகள், மீன், இறைச்சி, உயிர்க்கோழிகள் விற்பனையை தடை செய்தல்**
துணுக்காய் பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 1 km தூரத்துக்குள் வர்த்தக நிலையங்கள் மற்றும் பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழியிறைச்சி, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி என்பவற்றை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது இதனை மீறுப வர்கள் மீது சபையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

**08 படவரைஞராக பதிவுசெய்தல் / புதுப்பித்தல் - 2021**
2021ம் ஆண்டு பட வரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2021.01.31ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளைச் மேற்கொள்ள, புதுப்பித்துக் கொள்ளவும் முடியும்

**09. பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது**
பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங் களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் கழிவுகளை உக்கக்கூடியவை, கண்ணாடி, பிளாஸ்ரிக், இலத்திரனியல் என வகைப்படுத்தி கழிவுசேகரிப்பு வாகனத்தில் ஒப்படைப் பதுடன் வர்த்தகர்கள் தமது மேலதிக கழிவுகளை அகற்றுவதற்கு அலுவலகத்தில் உரிய கட்டணத்தை செலுத்தினால் கழிவகற்றல் மேற்கொள்ளப்படும் என்பதுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்

**10. பொதுச்சுகாதாரம் பேணுதல்**
சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொதுச்சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள் பற்றைகளைத் துப்பரவு செய்து பொதுச் சுகாதாரத்தினைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அல்லாதவிடத்து பிரதேச சபையால் தன்னுரித்தாக்கப்பட்டு துப்பரவு செய்யப்படும்

**11. கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தல்**
சபை எல்லைக்குள் பொது போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலி கால்நடைகளை உரிமையாளர்கள் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு தண்டம் அறவிடப்படுவதுடன் மீளப்பெறப்படாத கால்நடைகள் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

**அ.அமிர்தலிங்கம்**
**தவிசாளர்**
**பிரதேசசபை, துணுக்காய்.**

**யா/ கோப்பாய் தெற்கு**
**கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலையின்**

# மணிவிழா நாயகனை
# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (18.12.2020) மணிவிழாக் காணும் எமது பாடசாலை **அதிபர்**

**திரு.சுப்பிரமணியம் விவேகானந்தன்** (SLPS-II)
B.A, PGDE (Merit), M.A



அவர்களை உளமார வாழ்த்துவதோடு அவரது
ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்

**சேவைக்காலம்:**
ஆசிரியராக - 1989.11.28 - 2007.12.23
அதிபராக - 2007.12.24 - 2020.12.17

இருபாலைப் பதியில் வந்துதித்த
வித்தகனே விவேகானந்தன்
பரந்த உள்ளமும் பார் போற்றும் நற்குணமும்
ஆசிரியர், மாணவரை அணுகுவதில்
அன்பை ஆயுதமாக்கிய வீரன் நீங்கள்!
மாணவரின் திறமையை இனங்கண்ட சிற்பி நீங்கள்!

மாற்றங்கள் எதுவாயினும் அன்றே
மாறாதது இவரது நேர்மை ஒன்றே
முப்பொழுதும் முகத்திலொரு புன்சிரிப்பு
நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே
என்பது இவர் சிறப்பு!

பிறந்திட்ட மண்ணில் பெறுபேறுகளை உயர்த்த வந்தீர்!
பெயரளவில் நின்றுவிடாது புதுக்காவியம் படைத்து நின்றீர்!
அதிபர் எனும் சொல்லுக்கு அசையாத இலக்கணமானீர்!
ஆயிரமாயிரம் இதயங்களின் அன்பிற்கு மகுடமானீர்!
மாணவர் கல்விப் பாதைகளில் கலங்கரை விளக்கானீர்!

உரைத்ததில்லை இதுவரை - நீங்கள்
மனம் புண்பட ஒருவார்த்தை
மாணவர் சிந்தனைகளைச் செம்மையாக்கி
வாழ்வியல் எதார்த்தங்களை எடுத்து விளக்கி
மாணவர் வாழ்க்கைப் பாதையினை
வழிக்குக்கொண்டு வந்த தியாகச் செம்மல்!

மாதா பிதா குரு தெய்வம் என்பதற்கமைய
குருவாகத் தோன்றி பிதாவாக விடைபெறும்
எம் அன்பிற்கினிய முதல்வர் நீங்கள்!
மணிவிழா கண்டு வாழ்க.....!
மனநிறைவு கொண்டு வாழ்க....!
பணிநிறைவு பெற்று வாழ்க....!
பல்லாண்டு வாழ்க வாழ்க...!

உளமார வாழ்த்தும்:
**பாடசாலைச் சமூகம்**
**யா/ கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலை**

# சாவகச்சேரி நகராட்சிமன்றம்
# ஆதனப்பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சிமன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 10, தாமோதரம்பிள்ளை வீதி, 37,37A என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக்கொண்ட ஆதனம் பரமு ஆறுமுகம் என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட் டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை யாழ்ப்பாணம், தற்காலம் கொழும்பு-05 பார்க் வீதி, அண்டர்சன் தொடர்மாடி, இல. சீ3 இல் வசிக்கும் ஆறுமுகம் குலசேகர பரமவம்சா கைம்பெண் உமாதேவி என்பவர் பிரசித்த நொத்தாரிசு நளினி கணேஷயோகன் முகதாவில் 2013.11.23 ஆம் திகதியிடப்பட்ட 3422 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய விளம்பல் உறுதிமூலம் சீ.3, அண்டர்சன் தொடர்மாடி, பார்க் வீதி, கொழும்பு -05 ஐ சேர்ந்த ஆறுமுகம் குலசேகரர் பரமவம்சா அவர் களால் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு இல.7220Æ காணி வழக்கின் பிர காரம், குறித்த வழக்குத்தீர்வை காலஞ்சென்ற கணவரான ஆறுமுகம் குலசேகர பரமவம்சாவினது எனவும், அவரின் மரணத்திற்குப்பின் மனைவியான தனக்கே முற்றான உரித்துடையதெனவும் வெளிப் படுத்தியுள்ளார். அத்துடன் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற வழக்கு இல.7220Æ காணி இல் கோவை யிடப்பட்ட இணக்கம் காணப்பட்ட நிகழ்ச்சிக்குறிப்பின் பிரதி விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பின்னர் ஆறுமுகம் குலசேகர பரமவம்சா கைம்பெண் உமாதேவி பிரசித்த நொத்தாரிசு சீனியப்பா பொன்னம்பலம் சிவஞானம் முகதாவில் 2019.09.19ஆம் திகதியிடப்பட்ட 2921ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த பாலசிங்கம் ஜெகமயூரனுக்கு அறுதியாக வழங் கியுள்ளார்.

**ஆதன விபரம்**
வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோயிற்பற்று, சாவகச்சேரி இறை "பரமர் வளவு" நிலப்பரப்பு ஐந்து (05) குழி பூச்சியம் ஐந்து தசம் பூச்சியம் ஒன்று (05.01). இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வல்லிபுரம் சிவராசா அவர்களால் 10.09.2019 ஆம் திகதியில் அளந்து வரைந்த 7156 இலக்கத்தின்படி துண்டு-1 ,துண்டு-2 எனச்சுட்டப்பட்ட பாகங்கள் நிலப்பரப்பு ஐந்து (05) குழி பூச்சியம் ஐந்து தசம் பூச்சியம் ஒன்று (05.01) நிந்தமாக ஆட்சி செய்யப்பட்டு வரும் வரகு நிலம் அடங்கலும் அதைச் சேர்ந்தவைகள் அனைத்தும்.

**இதற்கு எல்லை,**
வடக்கு: நாகேந்திரன் மனைவி இரத்தினபூபதிக்குரிய ஆதனம்
கிழக்கு: பொது வீதியும் மகாதேவன் கேதீஸ்வரனுக்குரிய ஆதனமும்
தெற்கு: மகாதேவன் கேதீஸ்வரனுக்குரிய ஆதனமும் தாமோதரம்பிள்ளை வீதியும்
மேற்கு: துரைராசா ஜெகதீஸ்வரன் மனைவி சற்குணாவதிக்கும் சிவகரன் மனைவி பாரதிக்குமுரிய ஆதனங்கள்.

தற்போது பாலசிங்கம் ஜெகமயூரன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்துமூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காதபட்சத்தில் மேற்குறித்த ஆதனத் திற்கான உரிமையாளரது பெயருக்குப்பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சிமன்றம் பொறுப் பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**நகராட்சிமன்றம்,**
**சாவகச்சேரி.**

## 650...

மூலம் இதுவரையில் 31 ஆயிரத்து 720 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 387 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 26 ஆயிரத்து 353 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 874 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

## கூட்டமைப்பு....

முயற்சிகளில் ஈடுபடவுள்ளோம்" என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையிலும், நல்லூர் பிரதேச சபையிலும் பாதீடுகள் இரு தடவைகள் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து, தவிசாளர்கள் பதவி விலக்கப்பட்டுள்ளனர். பாதீட்டு வாக்கெடுப்பில் வி.மணிவண்ணன் தரப்பினர் எதிர்த்து வாக்களித்திருந்தனர்.

இந்தப் பின்னணியிலேயே வி.மணிவண்ணன் பருத்தித்துறையில் வைத்து மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை என்பற்றில் சிறப்பான ஆட்சி அமைப்போம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் வெளிப்படையாகப் பேசி நல்ல ஒரு ஆட்சி அமைய முயற்சிப்போம் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## அடுத்த...

பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா.

நேற்று யாழ்ப்பாணம் வந்த இராணுவத் தளபதி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

தமிழ் மக்கள் அதிகமாக வாழ்ந்து வரும் வடபகுதியில் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் கொரோனாவின் முதலாவது அலை தாக்கம் ஆரம்பம் முதல் அனைத்துத் தகவல்களும் சுகாதார அமைச்சாலேயே வெளியிடப்படுகின்றது. சுகாதார அமைச்சின் தகவல்களையே நாம் வெளியிடுகின்றோம். இதுதான் நடைமுறை. சுகாதார அமைச்சின் தகவல்கள் அனைத்தும் உண்மை.

சுகாதார நடைமுறைகளை வடபகுதி மக்கள் ஒழுக்கமாகவும் நேர்த்தியாகவும் கடைப்பிடிக்கின்றார்கள். அதன் காரணமாக முப்படையினர் மற்றும் பொலிஸார் சுகாதாரப் பகுதியினரால் வடபகுதியில் இலகுவாகக் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த கூடியதாகவுள்ளது.

இந்தக் கொரோனா நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியதற்காக நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் சார்பில் நான் தமிழ் மக்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மக்களைக் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாக்கும் முகமாக மக்களைப் பாதிக்காதவாறு சில சுகாதாரக் கட்டுப்பாடுகளை எடுக்கவுள்ளோம். அதற்காக அனைவரையும் தனிமைப்படுத்தமாட்டோம். ஆனால், கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் முகமாகவே சில நடைமுறைகளைச் செயற்படுத்தவுள்ளோம்.

எதிர்காலத்தில் நடமாடும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. எதிர்காலத்தில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக எதிர்வரும் வாரமளவில் சில புதிய கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றார். (எ-ம-22)

## ஐவருக்கு....

சுன்னாகம் சந்தை வியாபாரிகள் இருவருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

சுன்னாகம் பொதுச் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடும் 110 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் பரிசோதிக்கப்பட்டன.

அதில் இருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட இருவரும் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் மருதனார்மடம் சந்தையில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், தற்போது சங்கானை மற்றும் சுன்னாகம் பொதுச் சந்தைகளிலும் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவனை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் மூவருக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று 418 பேரின் மாதிரிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டிருந்தன.

இணுவில், உடுவில், சண்டிலிப்பாயைச் சேர்ந்தவர்களே தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களுடன் தொடர்புடையவர்களை இனங்காணும் நடவடிக்கையில் சுகாதாரத் துறையினர் இறங்கியுள்ளனர். (எ-26)

## இணுவிலில்....

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் மூவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இணுவில், உடுவில், சண்டிலிப்பாயில் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் இணுவிலில் தொற்றுடன் கண்டுபிடிக்கப்பட்டவர் உயர்தர மாணவராவார். இணுவில் மத்திய கல்லூரியில் உயர்தர வகுப்பில் கலைப் பிரிவில் இவர் கற்கின்றார். இவர் அண்மையில் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கும் வரையில் பாடசாலைக்குச் சென்றுவந்துள்ளார்.

இவரது நண்பர் ஒருவர் சுன்னாகம் பகுதியில் கடை வைத்திருக்கும் நிலையில், அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதையடுத்தே இந்த மாணவனுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## ஹெரோய்ன்....

பிராந்திய மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யபட்டுள்ளார். 200 கிராம் ஹெரோய்னுடன் அவர் நேற்றுக் காலை நெல்லியடியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

தெல்லிப்பழை கட்டுவனில் ஹெரோய்ன் வியாபாரத்தில் ஈடுபடும் 36 வயதுடைய குடும்பப் பெண் ஒருவர் 21 கிராம் போதைப்பொருளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டார். அவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே பிரதான நபர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு ஆமர் வீதியைச் சேர்ந்த 41 வயதுடைய முச்சக்கரவண்டிச் சாரதியே கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்கு பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர், தெல்லிப்பழை கட்டுவனில் கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுத்த சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஹெரோய்ன் விற்பனை செய்த குற்றச்சாட்டில் குடும்பப் பெண் ஒருவரைக் கைது செய்தனர்.

அவரிடமிருந்து 21 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது. அவர் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவரிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது. கொழும்பிலிருந்து பேருந்தில் ஹெரோய்னை எடுத்து வரும் நபர் மருதனார்மடத்தில் இறங்கி தனது வீட்டுக்கு கொண்டு வந்து பொதியைத் தருவார் என்றும், அதை யாழ்ப்பாணத்தில் 5 பகுதிகளுக்கு பிரித்து வழங்குவேன் என்றும் பெண் தகவல் வழங்கியுள்ளார்.

அந்த நபர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கொழும்பிலிருந்து பேருந்தில் வந்தார் என்றும் அந்தப் பெண் குறிப்பிட்டுள்ளார். அதையடுத்துப் பொலிஸார், தாயாரை மீளவும் வீட்டில் கொண்டு சென்று விட்டுள்ளனர். கொழும்பில் இருந்து வந்த நபரை நெல்லியடிக்குச் செல்லுமாறு அந்தப் பெண்ணைத் கூற வைத்த பொலிஸார், மந்திகையில் அந்த நபருக்காகக் காத்திருந்தனர்.

கொழும்பிலிருந்து வந்த பேருந்தில் மந்திகையில் நேற்று அதிகாலை வந்து இறங்கிய நபரைக் கைதுசெய்த பொலிஸார், அவரிடமிருந்து 200 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளையும் கைப்பற்றினர். அத்துடன் அந்த நபருக்கு கொழும்பில் ஹெரோய்ன் விநியோகிப்பவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க கொழும்பு பிராந்திய பொலிஸ் பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் இருவரும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். 221 கிராம் ஹெரோய்னும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சர் சேனாதிரவின் கீழான உப பொலிஸ் பரிசோதகர் நிதர்சன், உப பொலிஸ் பரிசோதகர் மதுரங்க ஆகியோர் தலைமையிலான குழுவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (ம-26)

## வடக்கு....

வடக்கு மாகாணத்தில் உள்ள சந்தைகளில் கொரோனா கொத்தணி உருவெடுக்கும் அபாயம் தோன்றியுள்ளதை அடுத்து கொரோனா பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொதுச்சந்தைகளை மூடவேண்டும் என்று வடமாகாண சுகாதார சேவையாளர் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்திருந்தார்.

அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட உள்ளூராட்சி ஆணையாளர் மறுஅறிவித்தல் வரை சந்தைகளை மூட வேண்டும் என்று உத்தரவிட்டார். (ம-26, 22)

## ஹெரோய்ன் விற்றார்...

பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தபோது, அவர் தான் ஹெரோய்ன் விற்பனை செய்வதில்லை என்று அழுது கெஞ்சியதால், அந்தப் பகுதியில் மக்கள் கூடிச் சற்றுப் பதற்றமான நிலைமை தோன்றியது.

அந்தப் பகுதியில் ஹெரோய்ன் விற்பனை செய்யப்படுகின்றது என்று கிடைத்த தகவலுக்கு அமைய திட்டமிட்டு ஒருவர் ஹெரோய்ன் கொள்வனவுக்கு அனுப்பப்பட்டார் என்றும், அந்த நபர் ஹெரோய்ன் கொள்வனவு செய்த பின்னர், விற்றவரை அடையாளம் காட்டினார் என்றும் பொலிஸார் கூறுகின்றனர். பொலிஸாரால் அனுப்பப்பட்டவர் சுட்டிக் காட்டிய நபரைக் கைது செய்தபோது, அவர் தான் ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபடவில்லை என்று மறுத்துள்ளார். தான் ஐயப்பன் விரதம் அனுஷ்டித்து வருகின்றேன் என்றும், தான் ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபடவில்லை, தன்னைக் கைதுசெய்ய வேண்டாம் என்று அழுது கெஞ்சியுள்ளார். அப்போது அந்தப் பகுதியில் அதிக எண்ணிக்கையான மக்கள் கூடியதால் அங்கு சற்றுப் பதற்றமான நிலைமை தோன்றியது.

பின்னர் பொலிஸார் சந்தேகநபரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-110)

## இரண்டாக....

நொச்சி வலயப் பிரிப்பை எவ்வாறு மேற்கொள்வது என்று கடந்த நவம்பர் மாதம் 22ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் ஆராயப்பட்டது. கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளர்கள், அந்தப் பகுதிப் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தற்போதுள்ள கரைச்சிக் கோட்டத்தை ஒரு வலயமாகவும், பூநகரி, கண்டாவளை, பளைக் கோட்டங்களை ஒரு வலயமாகவும் பிரிப்பது என்று அதில் யோசனை கூறப்பட்டது. ஆனால் பூநகரி, கண்டாவளை என்பன பரந்த நிலப் பரப்பை கொண்டுள்ளதால் நிர்வாகத்தை நடத்துவதில் சிக்கல் ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

பலரின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்ட நிலையில், ஒரே நிலத் தொடர்பு கொண்ட கரைச்சி, பூநகரிக் கோட்டங்களை ஒரு வலயமாகவும், கண்டாவளை, பளைக் கோட்டங்களை ஒரு வலயமாகவும் பிரிப்பது என்று இறுதியில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (எ)

## ஜெனிவா....

ப்புக்கூறலிலிருந்து இலங்கை அரசு விடுபட்டுச் செல்லாதிருக்கும் வகையில், அடுத்த மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடரில் மக்கள் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியன ஒன்றிணைந்து செயற்படுவதற்குக் கடும் முயற்சி எடுக்கப்படுகின்றது.

2015ஆம் ஆண்டு இலங்கை அரசின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி, அதன் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய அவகாசம் வழங்கப்பட்டும் அதிலுள்ள பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் தற்போதைய அரசு அத்தீர்மானத்திலிருந்து விலகவுள்ளது என அறிவித்துள்ளது. இந்த நிலையிலேயே தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் நின்று செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ம-22)

# சமபலத்துடன் மோதும் ஆஸி - இந்தியா !





அடிலெய்ட், டிசெ.18

டெஸ்ட் சம்பியன்சிப்பின் ஒரு அங்கமாக ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இந்தியா அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. இத்தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி அடிலெய்ட் மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது.

பகலிரவு போட்டியாக நடைபெறும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற இந்தியா அணி துடுப்பாட்டத்தை தெரிவுசெய்தது. இந்தியா அணி சார்பில் ஆரம்ப வீரர்களாக பிரித்வி ஷா , மயாங்க் அகர்வால் இணை களமிறங்கியது. ஸ்ராார்க்கின் முதல் ஓவரின் இரண்டாவது பந்தில் ஓட்டம்மெதனையும் பெறாது பிரித்வி ஷா போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து மயாங் அகர்வாலும் கம்மின்ஸ் பந்துவீச்சில் 17 ஓட்டங்களுடன் போல்ட் டானார்.

அடுத்து இணைந்த புஜாரா , கோலி இணை அணியின் ஓட்ட எண்ணிக்கையை கிடுகிடுவென உயர்த்தியது. இருவரும் இணைந்து 68 ஓட்டங்களை இணைப்பா 43 ஓட்டங்களுடன் லையன் பந்துவீச்சில் லபுஞ்சனயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த ரகானே சிறந்த இணையை வழங்க கோலி அரைச்சதம் கடந்தார். தொடர்ந்து ஆடிய கோலி 74 ஓட்டங்களுடன் ரன் அவுட்டாகி மைதானத்தை விட்டு வெளியேறினார்.

அவரைத் தொடர்ந்து ரகானேயும் 42 ஓட்டங்களுடன் ஸ்ராார்க்கின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்க பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட விகாரியும் ஹசில்வூட்டின் பந்துவீச்சில் 16 ஓட்டங்களுடன் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த சகா(9), அஸ்வின் (15) இணை ஆட்டமிழக்காதிருக்க முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. பந்துவீச்சில் ஸ்ரார்க் இரு இலக்குகளையும் ஹசில்வூட், கம்மின்ஸ், லையன் தலா ஒவ்வொரு இலக்குகளை சாய்த்தனர். (ரி-4)


## காணவில்லை



உரும்பிராய் மேற்கு அன்னாங்கையை சேர்ந்த
**இரத்தினம் குணசிங்கம்**
75 வயது உடைய முதியவர் கடந்த 12.12.2020 சனிக்கிழமை மாலை 04.00 மணியளவில் பச்சை நிற சேட் நீல நிற சாரம் அணிந்து சைக்கிள் மூலம் வீட்டில் இருந்து வெளியே சென்றவர் இன்று வரை வீடு திரும்பவில்லை அவரை கண்டால் 0773162713 அல்லது 0776911692 மேற்படி தொலைபேசி இலக்கங்களுக்கு அறியதரவும்.

## பணியாளர் தேவை

மானிப்பாயில் இயங்கும் பிரபல அரைக்கும் ஆலைக்கு அனுபவமுள்ள பணியாளர் தேவை.
077 337 0914, 075 557 5324

## காணி தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் 2 பரப்புக் காணி தேவை.
தரகர் தேவையில்லை.
076 667 2217

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 01 . 04 . 1940
மறைவு 18 . 11 . 2020



**திரு.பொன்னையா செல்வரட்ணம் (சிவா)**
(ஸ்காபுரோ கனடா)

பாசத்தின் உறைவிடமே.
பண்பின் ஒளிவிளக்கே
தேசம் பல கடந்து -எமை
வாழ்வித்த குலவிளக்கே
நேசமுடன் எம்மை காத்து
நீக்கமற நினைந்தீரே - உம்
மாசற்ற புன்னகையை
இனிக் காண்பது எப்போது..?

பத்மநாதன் இந்திரா (ஸ்காபுரோ கனடா)
இராசலிங்கம் தேவி (ஸ்காபுரோ கனடா)
சகோதரிகள்.

கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 07 . 1929
மறைவு 17 . 12 . 2020



**திரு.கார்த்திகேசு நடராஜா (K.K.நடராஜா)**
**(ஓய்வுபெற்ற அதிபர் காரைநகர் இந்துக் கல்லூரி, வட்டு இந்துக் கல்லூரி, காரைநகர் யாழ்ரன் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**

காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் திரு. கார்த்திகேசு நடராஜா அவர்கள் நேற்று (17.12. 2020) வியாழக்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்ற கமலாவதியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர் காரை இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான Dr.கணபதிப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகுமாரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், காரைநகர் யாழ்ரன் கல்லூரி), அம்பிகாதேவி (பிரதி அதிபர், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மானிப்பாய்), Dr. ஜெயகுமாரன், (புற்றுநோய் நிபுணர், மகரகம) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகேஸ்வரி (ஆசிரியர், ஜோன் பொஸ்கோ) காலஞ்சென்ற இராஜரட்ணம், Dr. வாசுகி (களுபோவில வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுகந்தன், சுகன்யா, கீர்த்தனா, ராகவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2020) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் பயிரிக்கூடல் காரைநகர் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக குடும்ப மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பயிரிக்கூடல், காரைநகர்.**
**தொடர்புகளுக்கு: 077 696 4976**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 06 . 1934
மறைவு 17 . 12 . 2020



**நாகன் கந்தையா**

உரும்பிராயை பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை மற்றும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட் நாகன் கந்தையா அவர்கள் நேற்று (17.12.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகன் பூபதி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சின்னமணியின் அன்புக் கணவரும், சறோஜினிதேவி, கமலராணி, காலஞ்சென்ற தவமலர், சந்திரகுமார், சதீஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்.**